# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 497 பிலவ வருடம், பங்குனி மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(08.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 06 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## பேரணிகளில் சிறார்களை ஈடுபடுத்த வேண்டாம்!




தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வலியுறுத்தல்

02 பக்கம்

## இடைக்கால அரசே ஒரே தீர்வு



சொல்கிறார் விமல்

02 பக்கம்



தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிரான போராட்டம் தலவாக்கலை நகர விளையாட்டு மைதானத்தில் நேற்று (07) இடம்பெற்றது.

# குறைந்த அமைச்சர்களுடன் அமைச்சரவை நியமனம்!

## இன்று காலை பதவியேற்பு நிகழ்வு

•யோ.தர்மராஜ்

அமைச்சரவை நியமனம் இன்று இடம்பெறவுள்ளதாக நேற்றிரவு தெரியவந்தது. சுமார் 15 அமைச்சர்களுடன் வரையறுக்கப்பட்ட அமைச்சர வையே அமையவுள்ளதாக சொல்லப்பட்டது. மின்சக்தி, எரிபொருள் ஆகிய இரண்டையும் இணைத்து ஒரே அமைச்சாக வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைச்சுப் பதவிகளை வகித்த பலருக்கு இந்த புதிய அமைச்சரவையில் இடமில்லை என்றும் தெரியவந்தது. நிதியமைச்சர் பதவியேற்ற அலி சப்ரி அந்தப் பதவியை இராஜினாமா செய்திருந்தபோதிலும்....

02 பக்கம்



## பதவியில் அமர்த்தியோரே வீதியில் இறங்கி அரசை துரத்தும் நிலைமை

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்!

நாட்டின் ஜனாதிபதியை வீட்டுக்குப் போகுமாறு கோரி பாமரர்களும், படித்த வர்களும், சிறுவர்களும், பெரியோரும் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தும் நிலை ஏற்பட்டுள்ளமை இந்த நாட்டின் துரதிர்ஷ்டமாகும் என்று...

02 பக்கம்

## இலங்கை பொருளாதார நெருக்கடி




### நிவாரண நிதியாக ரூ 82,000ஐ வழங்கிய தூத்துக்குடி யாசகர்

தூத்துக்குடியைச் சேர்ந்த யாசகர் பூல்பாண் டியன், தான் யாசகம் பெற்ற 20 ஆயிரம் ரூபாவை (இலங்கை பெறுமதி 82 ஆயிரம் ரூபா) பொருளாதார நிதி நெருக் கடியில் சிக்கி யுள்ள இலங்கை அரசுக்கு வழங் குவதற்காக அளித்துள்ளார்...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..




வீட்டில கெபினெட் உடைஞ்சு கிடக்குது... அத செய்ய பல தடவைகள் முயற்சித்தாலும் முடியேல்ல பாருங்கோ...

## நாடாளுமன்றம் சென்றார் கோட்டா!



02 பக்கம்

## நிறைவேற்று அதிகார நீக்க சட்டமூலத்தை சமர்ப்பிப்போம்



### எதிர்க்கட்சி நேற்று நாடாளுமன்றில் அறிவிப்பு

02 பக்கம்


## அஜித் நிவாட் கப்ரால் வெளிநாடு செல்லத் தடை

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வெளிநாடு செல்ல தடைவிதித்து, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் நேற்று உத்தரவு பிறப்பிக் கப்பட்டது. எதிர்வரும் 18 ஆம் திகதி அஜித் நிவாட் கப்ராலை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## கிளர்ச்சியை ஏற்படுத்த முயற்சி: இளைஞர்கள் சிக்கக்கூடாது!

### அமைச்சர் ஜோன்ஸ்டன் சபையில் தெரிவிப்பு



•யோ.தர்மராஜ்

ஜனாதிபதி பதவி விலகமாட்டார். ஜேவிபியின் அடிமட்ட இலக்குடன் மோத நாங்கள் தயார். உங்களுடைய சூழ்ச்சி எங்களுக்குத் தெரியும் என ஆளுந்தரப்பு...

02 பக்கம்

## அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கப்போவதில்லை



### எம்.எஸ்.தௌபீக் தெரிவிப்பு

02 பக்கம்

## நான்கு அடிப்படை உரிமை மனுக்களை விசாரணைக்கு எடுத்த உயர் நீதிமன்றம்

02 பக்கம்

## இலங்கை கடன் செலுத்துகை மூடிஸ் தர வரிசையில் ஆபத்தான நிலையில்

மூடிஸ் சர்வதேச பொருளாதார தர வரிசையில் இலங்கை மேலும் கீழிறங்கி யுள்ளது. தற்போதுவரை, இலங்கை அந்த வரிசையில் B2 தர வரிசையில் இருந்தது. அண்மைய தரவரிசையில் CAA1க்கு முன்னேறியுள்ளது.

மூடிஸ் தரவரிசைப்படி, இந்த நிலை கடனுக்கான அதிக ஆபத்து வகையாகும்.




## ஜனாதிபதியை சபைக்கு அழைத்து மோட்டுக் கூத்து காட்டும் ஆளுங்கட்சி




### சபையில் விளாசினார் ஹக்கீம்

•யோ.தர்மராஜ்

நாட்டின் நெருக்கடியை கவனத்திற்கொள்ளாது, பொறுப்புக்கூறலை நிறைவேற்றாது, ஆளுந்தரப்பு எம்.பிக்கள் ஒருவர் பின் ஒருவராக இயலாமைக்கான ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கின்றனர். பின்னர் ஜனாதிபதியை நாடாளுமன்றத்திற்குள் அழைத்துவந்து மோட்டுக் கூத்து (மோட சக்ஙன்) குதூகலம் காண்கின் றனர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித் தார்.

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து இரண்டாவது நாளாக நேற்று (07) இடம்பெற்ற...

02 பக்கம்




நேற்று நாடாளுமன்றம் சென்ற ஜனாதிபதி கோட்டாபய அங்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலுடன் மூடிய அறைக்குள் சுமார் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து ரணில் தரப்பு வெளியிட்ட தகவல்களின்படி, நாட்டில் விரைவில் பொதுத் தேர்தல் ஒன்று வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏப்ரல் 11, 12ஆம் திகதிகள் பொது விடுமுறை

ஏப்ரல் 11ஆம் திகதி மற்றும் 12ஆம் திகதி பொது விடுமுறை நாட்களாக அரசாங்கத்தி னால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

புத்தாண்டினை முன்னிட்டு அரச ஊழியர் களுக்கு விடுமுறை வழங்குவதனை முன்னிட்டு இவ்வறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது. 13ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை பொது விடுமுறை நாட்களாக உள்ள நிலையிலேயே இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்திற்கு ஆதரவு...

அரசுக்கு ஆதரவு வழங்குவதில் இருந்து தான் விலகிக்கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட 20ஆவது அரசியலமைப்பு திருத்தம், நிதிச் சட்டம் மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு என்பவற்றின்போது அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தாலும் இனிவரும் காலத்தில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் எந்தப் பிரேரணைக்கும் ஆதரவாக வாக்களிக்கப்போவதில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக் தெரிவித்தார்.

தான் தற்போது கட்சியின் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டுள்ளதாகவும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்ற காரணங்களால் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் வலுபெற்றுள்ளமையினால், தற்போது மக்களின் பக்கம் இருக்க வேண்டும் என விரும்புவதாகவும் அவர் கூறினார்.

ஒரு வாரத்திற்கு போதுமான மருந்து கூட கையிருப்பில் இல்லையென்று கூறப்படும் நிலையில், தற்போது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க முடியாது என அவர் தெரிவித்தார்.

## பேரணிகளில் சிறார்களை...

பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்கள் ஈடுபடுவதை தடுக்க வேண்டும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களை வலியுறுத்தியுள்ளது.

கடந்த சில நாட்களாக நடைபெற்ற பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்கள் கலந்துகொண்டதை அவதானித்ததன் பின்னரே இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

குறித்த உடன்படிக்கையில் சிறுவர்களின் அதிகபட்ச பாதுகாப்பு, நல்வாழ்வை உறுதி செய்வதுடன் விபத்துகள் அல்லது உடல், உளவியல் பாதிப்புகளைத் தடுப்பதற்கும் இலங்கை உறுதி பூண்டுள்ளது.

## இலங்கை பொருளாதார நெருக்கடி...

தூத்துக்குடி மாவட்டம் ஆலங்கிணறு பகுதியை சேர்ந்தவர் பூல்பாண்டியன். இவர் ஒரு யாசகர். தான் யாசகமாக பெறும் பணத்தை சேமித்து தனக்கென்று செலவழிக்காமல் அப்பணத்தை பொது நிவாரணங்களுக்கு உதவியாக வழங்கி வருகிறார். கொரோனா தொற்று காலத்தில், தனது சேமிப்பிலிருந்து ரூ.10,000ஐ பல முறை மதுரை மாவட்ட ஆட்சியருக்கு நிவாரணமாக வழங்கி வந்தார். தனது சேவை காரணமாக பொதுமக்களால் யாசகர் பூல்பாண்டியன் பாராட்டப்பட்டு வருகிறார். இதுவரை ரூ.4 இலட்சத்துக்கும் அதிகமான தொகையை கொரோனா நிவாரண நிதியாக பூல்பாண்டி வழங்கியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கை நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் இலங்கை மக்களுக்கு உதவுமாறு தான் யாசகம் பெற்று சேமித்து வைத்த ரூ.82,000 பணத்தை மதுரை மாவட்ட ஆட்சியரிடம் யாசகர் பூல்பாண்டி வழங்கியுள்ளார்.

பூல்பாண்டியன் அளித்த பேட்டியில், ''எனக்கு யாசகம் மட்டுமே கேட்கத் தெரியும், ஆனால் யாசகம் கொடுக்கத் தெரியாது என்பதால் ஏழைகளுக்கு உதவி சென்றடையும் என்பதால் அரசிடம் நிதி வழங்கி வருகிறேன். என்னைப் போல யாசகம் பெறும் பழக்கத்தை மற்றவர்கள் தவிர்க்க வேண்டும். உழைத்து மட்டுமே உண்ண வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். எனக்கு பணத்தின் மீது ஆசை இல்லாத காரணத்தால் நான் யாசகம் பெறும் பணத்தை உதவிக்காக வழங்குகிறேன்'' என்று தெரிவித்திருந்தார்.

இவர் யாசகம் பெறும் சிறு சிறு தொகையை மருந்து கடை நண்பர் ஒருவரிடம் கொடுத்து சேமித்து வருவார். ரூ.10,000 சேர்ந்தவுடன் அந்தத் தொகையை நிவாரண நிதிக்கு அளிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இம்முறை அந்தத் தொகை ரூ.82,000 ஆகியிருக்கிறது.

## ஜனாதிபதியை சபைக்கு அழைத்து...

விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆளுந்தரப்பு எம்.பிக்கள் ஒருவர் பின் ஒருவராக இயலாமைக்கான ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கின்றனர். பின்னர் ஜனாதிபதியை நாடாளுமன்றத்திற்குள் அழைத்துவந்து மோட்டுக் குதுகலம் கண்டனர். ஆனால், வெளியில் நடக்கும் சம்பவங்கள் குறித்து கவனத்தில் கொள்வதில்லை.

ஹிருணிகா பிரேமச்சந்திரவும் அதன் பின்னர் இளைஞர்களும் தங்களுடைய வீட்டை முற்றுகையிடும் வரை 'வெடகரன அபே விருவா' அறிந்திருக்கவில்லை. ஆனால், ஞானக்காவின் வீட்டை முற்றுகையிடும் போது மாத்திரம் பாதுகாப்பு வழங்குகின்றனர். இவ்வாறான ஜனாதிபதியை நினைத்து வெட்கமடைகின்றோம்.

தவறுகளுக்கு பொறுப்பேற்க முடியாத ஜனாதிபதி பதவி விலகுங்கள் என்றே மக்கள் வலியுறுத்துகின்றனர். நிதி அமைச்சர் ஒருவரை நியமிக்க முடியாத ஜனாதிபதி, உறுப்பினர்களை வைத்து கொண்டு நாடாளுமன்றத்தில் மோட்டு குதூகலம் காண்கின்றார். எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் இருக்கும் போதே ஜனாதிபதியை நாடாளுமன்றத்திற்கு அழைத்து வந்தனர். இல்லையேல் பாரிய பதிலடிகள் வழங்கியிருப்பார்கள். எனவே, இயலாமையின் ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கிக் கொண்டிருக் கின்றனர். சபைக்கு வெளியிலுள்ள யதார்த்தத்தை புரிந்து கொள்ளுங்கள். கிளர்ச்சியை ஏற்படுத்துவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமாரவின் மீது குற்றம் சுமத்துவது பொருத்தமல்ல. நீங்களும் கிளர்ச்சியின் ஊடாகவே ஆட்சியை கைப்பற்றினீர்கள் என்பதை மறந்துவிட்டீர்களா? இவ்வாறான வரலாற்றை வைத்துக்கொண்டு எங்களுக்கு பாடம் எடுக்க வர வேண்டாம்.

பொறுப்புக்கூறலை தட்டிக்கழிக்கும் நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. பொறுப்புகளை நிறைவேற்றுங்கள். தற்போது 113 ஐ காட்டினால் ஆட்சியை தருவதாக கூறுகின்றீர்கள். நெருக்கடியின் போது இவ்வாறா அரசாங்கம் செயற்பட வேண்டும்? - என்றார்.

## குறைந்த அமைச்சர்களுடன்...

அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லையென்பதால் மீண்டும் நிதியமைச்சராக அலி சப்ரி பொறுப்பேற்பாரென மற்றுமொரு தகவல் தெரிவித்தது.

## நாடாளுமன்றம் சென்றார் கோட்டா!...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றம் சென்றார். நாடாளுமன்ற சபைக்குள் பிரசன்னமாகிய ஜனாதிபதி அங்கு சில நிமிடங்கள் இருந்தபடி சபை அமர்வுகளை கவனித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாள் விவாதம் இடம்பெற்றது.

## அஜித் நிவாட் கப்ரால்...

முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த தனிப்பட்ட முறைப்பாட்டை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குணவெல, இந்த உத்தரவை பிறப்பித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநராக செயற்பட்ட காலப்பகுதியில் பொதுமக்களின் பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி மைத்ரி குணவர்தன மற்றும் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர், இந்த முறைப்பாடு தொடர்பில் மன்றில் ஆஜராகி விடயங்களை முன்வைத்தனர்.

## இடைக்கால அரசே ஒரே தீர்வு...

**யோ.தர்மராஜ்**

சர்வதேச நாடுகளை பகைத்துக்கொண்டுள்ள தற்போதைய அரசாங்கத்தினால் நட்பு நாடுகளுடன் பேசி உதவிகளை பெற முடியாது. எனவே, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகி, மக்கள் நம்பிக்கைக் கொள்ளும் இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கவே தற்போதை நெருக்கடிக்கான முதல் தீர்வாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

அத்தோடு, நெருக்கடி உக்கிரமடைந்தால் மயானத்திற்கே பாதை வெட்டப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து இரண்டாவது நாளாக நேற்று (07) இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எங்களுடைய தாய் நாடு பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இது குறித்து நாங்கள் முன்னெடுக்கும் விவாதத்தின் இறுதியில் எவ்வாறான தீர்வுகள் கிடைக்கும் என்பதை மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால், நெருக்கடியை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவே முயற்சிக்கின்றனர். மாறாக, மக்களுக்கு வெற்றியை பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே திட்டங்களை வகுக்க வேண்டும். எனினும், அது நடப்பதாக தெரியவில்லை.

இந்த நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டும் என நாங்கள் அமைச்சராக இருந்த போதே அரசாங்கத்திடம் வலியுறுத்தினோம். முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமையை சமநிலையில் வைத்திருக்க முடியும். ஆனால், எந்தவொரு கருத்துக்கும் அவலட்சண அமெரிக்கர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு பலரும் கூறிய போது, அங்கு செல்லக் கூடாது என்பதற்கான யோசனையை அந்த அவலட்சண அமெரிக்கர் அமைச்சரவையில் முன்வைத்தார். அமைச்சர்கள் பலரும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு வலியுறுத்தினர். ஆனால், நெருக்கடியை உக்கிரமடைய செய்து தன்னுடைய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளவே அவர் முயற்சித்தார். குறிப்பாக, நெருக்கடி உக்கிரமடையும் போது, பிரதமர் பதவியையும் கைப்பற்றி, ஜனாதிபதியாகுவதற்கே முயற்சித்தார். இதனாலேயே இந்த நெருக்கடி உக்கிரமடைந்துள்ளது.

வரலாற்றில் புத்தாண்டை கொண்டாட முடியாத நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. நெருக்கடியால் உருவாகும் அராஜகம் அடிப்படை வாதிக்கே உதவும். மாறாக, சாதாரண மக்களுக்கு எவ்வித உதவியும் கிடைக்காது. நாடாளுமன்றத்தில் ஏதேனும் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் ஜனாதிபதி அமைச்சரவையை நியமிக்காதிருக்கலாம். எது எவ்வாறாயினும் குற்றம் சுமத்துவது போல தீர்வையும் முன்வைக்க எமக்கு பொறுப்புள்ளது.

நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, 4, 5 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், தற்போதைய அரசாங்கத்தால் அது முடியாது. இந்த அரசாங்கம் சர்வதேச நாடுகளை பகைத்துக்கொண்டுள்ளது. எனவே, இந்த அரசாங்கத்தால் நட்பு நாடுகளுடன் பேசி உதவிகளை பெற முடியாது.

எனவே, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகி, இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும். அதில் அனைத்து கட்சிகளும் இணைய வேண்டும். இந்த புதிய அரசாங்கத்தால் அந்நிய செலவாணிக்கு தேவையான நிதியை திரட்டிக்கொள்ள முடியும். மக்கள் நம்பிக்கை கொள்ளும் அரசாங்கத்தை உருவாக்குவதே முதல் தீர்வாக இருக்கும். பின்னரே சர்வதேச நாணய நிதியத்துடன் பேச முடியும். நெருக்கடி உக்கிரமடைந்தால் மயானத்திற்கே பாதை வெட்டப்படும் -என்றார்.

## நான்கு அடிப்படை...

நாடளாவிய ரீதியில் அமுலாகும் வகையில் அவசரகால சட்ட விதிமுறைகளை அமுல்படுத்தியமை, ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தமை மற்றும் சமூக வலைத்தளங்களுக்கு தடை விதித்தமையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 04 அடிப்படை உரிமை மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

குறித்த செயற்பாடுகளினூடாக அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளனர்.

அதற்கமைய, இந்த அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் ஜுலை மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, தெஹிதெனிய, மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் இந்த அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஊடகவியலாளர்களான ரசிக்க ஜயக்கொடி, ரோயல் ரெமண்ட் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளரான சஷி வின்சன்ட், மொரட்டுவை நகர சபை உறுப்பினர் லிஹினி பெர்னாண்டோ ஆகியோரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோர் மனுக்களின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் மிக நீண்ட விளக்கவுரையை மன்றுக்கு சமர்ப்பித்தனர்.

நாடளாவிய ரீதியில் அமுலாகும் வகையில், அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியமை, ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தமை, 15 மணித்தியாலங்களாக சமூக வலைத்தளங்களை பயன்படுத்த தடை விதித்தமை ஆகியன அடிப்படை உரிமையை மீறும் செயற்பாடுகள் என ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இது தான்தோன்றித்தனமான செயற்பாடாக காணப்படுவதுடன், பொதுமக்களின் நலனை பாதுகாக்கவே அவசரகால சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதனை தவிர்த்து, பொதுமக்களின் நிலைப்பாடுகளை ஒடுக்குவதற்கு அவற்றை பயன்படுத்த முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

விடயங்களை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் குழாம் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

## நிறைவேற்று அதிகார...

**யோ.தர்மராஜ்**

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை பறித்துவிட்டு இன்று தீர்வை பெற்றுத்தருமாறு கோருகிறார் ஜனாதிபதி. ஒருவேளை, தீர்மானங்கள் எடுத்தாலும் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது கேள்விக்குறியாகும். எனவே, நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை நாங்கள் முன்வைப்போம் என எதிர்க்கட்சியின் பிரதான கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அத்தோடு, நெருக்கடி ஏற்பட்டமைக்கு ஜனாதிபதி முதலில் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் அவர் சபையில் கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து இரண்டாவது நாளாக நேற்று (07) இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நெருக்கடிகளுக்கு கடந்த மூன்று நாட்களாக நாடாளுமன்றத்தில் தீர்வை தேடுகின்றோம். நாட்டில் நெருக்கடியை நாங்களா அல்லது நாடாளுமன்றமா உருவாக்கினோம்? உணவு தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கு நாங்களா காரணம்?. உரப்பிரச்சினையாலேயே 50 வீதம் விளைச்சல்கள் குறைந்தன. இன்று உரத்தை கொடுப்பதால் என்ன பயனுள்ளது. சேதனப் பசளை குறித்து நாடாளுமன்றத்தில் எவ்வித அனுமதியும் கேட்கவில்லை. தான்தோன்றித்தனமாக எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

மக்களுக்கு தேவையான உணவுகள், ஆடை மற்றும் வீடுகள் அத்தியாவசியமானது என அரசியலமைப்பிலேயே கூறப்பட்டுள்ளன. இதனை ஜனாதிபதி பாதுகாக்க வேண்டும். எனினும், இன்று வீடொன்றை நிர்மாணிக்க முடியாதளவிற்கு சீமெந்து விலை அதிகரித்துள்ளன. எனவே, அரசியலமைப்பிலுள்ள இந்த மூன்று விடயங்களையும் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் ஜனாதிபதி அரசியலமைப்பை மீறி செயற்படுகின்றார்.

ஆட்சிக்கு வந்தவுடன் நாடாளுமன்றம், பிரதமர் மற்றும் சபாநாயகரின் அதிகாரங்களை ஜனாதிபதி தன்வசம் பெற்றுக்கொண்டார். இதனால் நாடாளுமன்றம் செல்லுபடியாகாத நாணயமாகியது. அதிகாரத்தை பறித்துவிட்டு இன்று நாடாளுமன்றத்திடம் தீர்வை கோருகிறார் ஜனாதிபதி. ஒருவேளை, தீர்மானங்கள் எடுத்தாலும் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது கேள்விகுறியே. நாடாளுமன்றம் சீர்குலைவதற்கு சபாநாயகரும் பொறுப்புக்கூற வேண்டும்.

நெருக்கடிகளை நாங்கள் உருவாக்கவில்லை. அப்படி நாங்கள் உருவாக்கியிருந்தால் தீர்வையும் வழங்குவோம். நெருக்கடிகளுக்கு தீர்வு வேண்டுமாயின் அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இரு தரப்பும் இணைந்து நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டும். இல்லையேல் 19 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள். அத்தோடு, நெருக்கடி ஏற்பட்டமைக்கு ஜனாதிபதி முதலில் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். மக்களின் போராட்டத்தை சாதாரணமாக எடுக்க வேண்டாம். நாங்கள் ஆபத்தான நிலையில் இருக்கின்றோம். எனவே, நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை நாங்கள் முன்வைப்போம். அது குறித்து ஆளுந்தரப்பு ஆராய வேண்டும்.

அமைதியாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் மக்களின் பாதிப்பினால் உக்கிரமடைந்துள்ளன. நாட்டை நெருக்கடிக்குள் தள்ளிய ஜனாதிபதியை வைத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல முடியுமா என்பது கேள்வி குறியாகியுள்ளது. இது குறித்து முக்கிய முடிவொன்றை எடுங்கள் - என்றார்.

## கிளர்ச்சியை ஏற்படுத்த...

பிரதான கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். அத்தோடு, நாட்டில் மக்கள் மரணிப்பதும், இரத்த ஆறு ஓடுவதும், மக்கள் வரிசையில் நிற்பதுமே ஜே.வி.பிக்கு தேவையாகவுள்ளது. எனவே, இளைஞர் யுவதிகளும் இவர்களின் சூழ்ச்சியில் சிக்கிக் கொள்ள வேண்டாம். கிளர்ச்சியான போராட்டங்களுக்கும் செல்ல வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து இரண்டாவது நாளாக நேற்று (07) இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

'கோ ஹோம் கோட்டா' என்றே அநுரகுமார திசாநாயக்க முதலில் தெரிவித்தார். ஆனால், ஜனாதிபதி பதவி விலக மாட்டார். உங்களின் அடிமட்ட இலக்குடன் மோத நாங்கள் தயார். உங்களுடைய சூழ்ச்சி எங்களுக்கு தெரியும். நாட்டில் தற்போதே எரிபொருள், பால்மா போன்ற பிரச்சினைகள் இரண்டாவதாகவே உங்களுக்கு நினைவுக்கு வருகின்றன. ஆனால், வாத விவாதங்கள் இல்லாது சட்ட மூலத்தை நிறைவேற்றியமைக்கு எதிர்க்கட்சிக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இதுவே எங்களுக்கு வேண்டும். அரசியல் செய்ய நாடு முக்கியம். கிளர்ச்சி அரசியலுக்கு இடமளிக்க முடியாது. 88, 89 ஆம் ஆண்டுகளில் உங்களுடைய களேபரத்தால் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் மரணித்தனர். அதனை மக்கள் மறந்துவிடமாட்டார்கள். தற்போதைய நெருக்கடிகளை எதிர்க்கட்சிகளும் புரிந்துகொண்டுள்ளன. அனைவரும் ஒன்றிணைந்து இந்த நெருக்கடியை தீர்க்க முடியும் என எங்களுக்கு நம்பிக்கையுள்ளது. ஒருவருக்கு ஒருவர் குற்றம் சுமத்த முடியும். ஆனால், நாடு பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. கொரோனா தொற்று பாதிப்பால் முழு உலகுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. பல நாடுகளில் வரிசைகளில் மக்கள் நிற்கின்றனர். ஆனால், இந்த பிரச்சினை இலங்கையில் மாத்திரம் இருப்பதாக காட்ட முயற்சிக்கின்றனர். ஆனால், பல வேலைத்திட்டங்களுடன் இந்த நெருக்கடியை தீர்ப்போம் என மக்களுக்கு உறுதியளிக்கின்றோம்.

முழு அமைச்சரவையும் பதவி விலகியது இது முதல் தடவை என்றார். இது நல்ல யோசனைதானே. உங்களுடைய கோரிக்கைகளுக்கு அமையவே பதவி விலகினோம். 69 இலட்ச மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை அரசியலமைப்பை மீறி ஜனாதிபதி வீட்டுக்கு அனுப்புவதை ஏற்க முடியாது. அரசியலமைப்பை மீறி நாங்கள் செயற்பட முடியாது. உங்களுடைய கட்சியே அவ்வாறு செயற்படுகின்றது .

அரசியலமைப்பை மீறி எவ்வாறு செயற்படுவது, அதனை பாதுகாப்பதற்கே நாங்கள் சத்தியப் பிரமாணம் செய்துள்ளோம். ஆனால், 88, 89 ஆம் ஆண்டுகளில் உங்களுடைய கட்சி அவ்வாறே செயற்பட்டனர். உங்களுடைய நோக்கங்களுக்கு சிக்குண்டவர்கள் புதைக்குழிக்கே சென்றனர். அந்த யுகத்தை மீண்டும் கொண்டுவர வேண்டாம். நாங்களாக பதவி விலகவில்லை. ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமையவே நாங்கள் அமைச்சு பதவிகளை துறந்தோம். நாட்டில் மக்கள் மரணிப்பதும், இரத்த ஆறு ஓடுவதும், மக்கள் வரிசையில் நிற்பதுமே உங்களுக்கு தேவையாகவுள்ளது.

88, 89 ஆம் ஆண்டுகளை போன்றே தற்போதும் மக்களை வீதிக்கு இறக்குகின்றீர்கள். அதனை செய்ய வேண்டாம். நாட்டை சீர்குலைக்க வேண்டாம். நாடு தலைதூக்கி, சுற்றுலா பயணிகள் வருகை தர ஆரம்பிக்கும் போது நீங்கள் முழு நாட்டையும் தீ மூட்டியுள்ளீர்கள். எதிர்க்கட்சி ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு போராடினர். ஆனால், நீங்கள் கிளர்ச்சியை ஏற்படுத்த முயற்சி செய்கிறீர்கள்.

அரசியலமைப்பை மீறி நாங்கள் ஒருபோதும் செயற்படமாட்டோம். ஜனநாயகத்தை நாங்கள் பாதுகாப்போம். கைக்கூப்பி கேட்கின்றோம். இளைஞர்களை பாதைக்கு இறக்கி அவர்களை கொலை செய்ய முயற்சிக்க வேண்டாம். பாடசாலை மாணவர்களை கொலை செய்ய முயற்சிக்க வேண்டாம். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். முழு போராட்டத்திற்கும் ஜே.வி.பியே முக்கிய காரணமாகும்.

போராட்டங்களின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவே சூழ்ச்சிகள் முன்னெடுக்கப் படுகின்றன. மனித கொலை யுகத்திற்கு செல்ல வேண்டாம். இளைஞர் யுவதிகளும் இவர்களின் சூழ்ச்சியில் சிக்கி, போராட்டங்களுக்குச் செல்ல வேண்டாம். மீண்டும் கிளர்ச்சி யுகத்திற்கு செல்ல வேண்டாம். ஒன்றிணைந்து நெருக்கடிக்கு தீர்வை தேடுவோம். தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்றால் செல்வோம் - என்றார்.

## பதவியில் அமர்த்தியோரே...

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (07) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

"இன்று இந்த நாடு மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பாதைகளிலே சிறுவர்கள் முதல் பெரியோர் வரை, படித்தவர் முதல் படிக்காதவர் வரை எல்லோருமே "கோட்டா கோ ஹோம்" என்ற கோஷங்களுடன் திரிகின்ற மிகவும் இழிவான நிலை இந்த நாட்டுக்கு வந்துள்ளது. நமது நாட்டில் எத்தனையோ ஜனாதிபதிகள் பதவி வகித்தனர். ஆனால், அதற்கு மாற்றமாக எந்தவொரு ஜனாதிபதியும் அவமானப்படாத நிலை தற்போதைய ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. இவருக்கு பைத்தியம் என்று கூறுகின்றனர். இவ்வாறான நிலை ஏற்பட்ட பிறகும், இந்த சபையிலே ஒருசில அமைச்சர்கள் "நாங்கள் ஒருபோதும் விலகப் போவதில்லை, ஜனாதிபதியையும் விலக அனுமதிக்கமாட்டோம், அவர் விலகவும் மாட்டார், எதற்கும் முகங்கொடுக்க தயாராக உள்ளோம்" என பேசுகின்றனர்.

அவர் நாட்டின் தலைமைக்கு தகுதி இல்லாதவர் என தேர்தலுக்கு முன்னரேயே நாங்கள் உணர்ந்துகொண்டவர்கள். அதனாலேயே நாம் அவருக்கு எதிராக பிரசாரம் செய்தோம். எனினும், அவருக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. நாடாளுமன்றத் தேர்தலிலும் அவரது கட்சி வெற்றியீட்டியது. இவ்வாறு வாக்களித்தவர்கள்தான், இன்று நடு வீதிகளிலும் சந்திகளிலும் அவருக்கும், அவரது அரசுக்கும் எதிராக கோஷமிடுகின்றனர்.

அமெரிக்கா, லொஸ் ஏஞ்சல்ஸிலே உள்ள அவரது மகனின் வீட்டுக்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்கின்றவர்கள் என்ன மடையர்களா? அல்லது சஜித்தின் ஆதரவாளர்களா? அல்லது அநுரவின் ஆதரவாளர்களா? அல்லது சுமந்திரனின் ஆதரவாளர்களா? என்று சிந்திக்க வேண்டும். இவர்களின் கோஷத்தை மதித்து, இதன் அர்த்தத்தை புரிந்துகொள்ளாமல் இந்த சபையில் வந்து விதண்டாவாதம் பேசுவது முட்டாள்தனம் மட்டுமல்ல, ஆபத்தையும் கொண்டுவரும். நாட்டுக்கு பேரழிவை ஏற்படுத்தும்.

இரண்டு வருடகாலம் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை சிந்தியுங்கள். பதவிக்கு வந்து அவசர அவசரமாக, 20ஆவது திருத்தத்தை கொண்டுவந்தீர்கள். நாடாளுமன்ற அதிகாரத்தை பறித்து தனி நபர்களிடம் ஒப்படைத்தீர்கள். "முஸ்லிம் கட்சிகள் கூடாது, முஸ்லிம் வாக்குகள் கூடாது" எனக் கூறிய நீங்கள், எதிரணியில் வெற்றிபெற்ற முஸ்லிம் எம்.பிக்கள் ஏழு பேரைக் கொண்டு 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றினீர்கள். அதன்மூலம் கிடைத்த இலாபம் என்ன? பிரதமருக்கு இருந்த அதிகாரத்தை, அவரது தம்பி கோட்டாவுக்கு வழங்கினீர்கள். இவ்வாறான அதிகாரம் தனிநபருக்கு சென்றிருக்காவிட்டால், இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினையை நாடாளுமன்றம் பொறுப்பேற்றிருக்க முடியும். பிரதமர் பொறுப்புக் கூறும் நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, நீங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட இந்த 20ஆவது திருத்தம்தான் இந்தப் பிரச்சினையின் மூல வேராகும்.

இந்த இரண்டு வருடங்களிலும் நாட்டின் பொருளாதார நிலை பற்றி சிந்தித்திருக்கின்றீர்களா? கடன் சுமை, மக்களின் பொருளாதார பிரச்சினை தொடர்பில் ஏதாவது திட்டங்கள் தீட்டினீர்களா? இதற்கெல்லாம் கொவிட்டைக் காரணம் காட்ட முடியாது. கொவிட் பிரச்சினை உலகில் எல்லா நாடுகளையும்தான் ஆக்கிரமித்தது. ஆனால், மற்றைய நாடுகள் இவ்வாறு தடுமாறவில்லை. எதற்கெடுத்தாலும் வரிசையில் நிற்கும் நிலை எந்த நாட்டிலும் ஏற்படவில்லை.

ஜனாதிபதியின் முதலாவது உரையிலே இனவாதம் பேசினார். இரண்டாவது உரையிலே கூரகல, மண்மலை எல்லாவற்றையும் மீட்டுவிட்டோம் என்றார். யாரிடமிருந்து இவற்றை மீட்டீர்கள்? முஸ்லிம்கள் காலாகாலமாக பராமரித்து வந்த உரிமைகளை பறித்து எடுத்தீர்கள். உங்கள் அதிகாரத்தை வைத்து, அவற்றை கபளீகரம் செய்துவிட்டு, வீராப்புடனும் மமதையுடனும் பேசினீர்கள். இதனால் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்ததா? கடன் சுமைகள் அடைக்கப்பட்டதா? பெரும்பான்மை சிங்கள மக்களை சந்தோஷப்படுத்துவதற்காக இவ்வாறு பேசினீர்கள். இந்த இரண்டு வருடகாலம் இந்த நாட்டை குட்டிச்சுவராக்கியதை ஜனாதிபதி இனியாவது உணர்ந்துகொள்ள வேண்டும். கோட்டாபய தலைமைக்கு தகுதி இல்லாதவர் என்பதை குமார வெல்கம அன்று சொன்னார். அதனை அவர் இன்று நிரூபித்திருக்கிறார். அதன் வெளிப்பாடே அனைத்து சாராரும் ஜனாதிபதிக்கு எதிராக பாதைகளிலே நடத்தும் போராட்டங்கள்.

இங்கு ஒரு சில கள்வர்கள் இருக்கிறார்கள். நாட்டில் உள்ள 20 இலட்சம் விவசாயிகளை பஞ்சத்திலே கொண்டுவந்து நிறுத்தி, விவசாயத்தை நாசமாக்கிய ஒரு அமைச்சர் இருக்கிறார். நாட்டிலே பாதைகளை போட்டு, பாதைகளின் மூலம் கொமிசன் எடுக்கின்ற ஒரு அமைச்சர் இருக்கின்றார். இவ்வாறான ஒரு சிலர்தான், இன்று மக்களின் எதிர்ப்பு கோஷங்களை மதிக்காமல், "கோட்டா போகமாட்டார்" என்று சொல்கின்றனர். எங்களுக்கு கோட்டா பதவி விலகுவாரா இல்லையா? என்பதல்ல பிரச்சினை. எமக்கு எமது நாடு தேவை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பிற்பாடு எவ்வளவு பொய்களை பரப்பினீர்கள். நாட்டில் உள்ள 20 இலட்சம் முஸ்லிம்களையும் குற்றவாளிகளாக ஆக்கினீர்களே! "வந்த கொத்து" என்று ஒரு பொய்யை பரப்பினீர்கள். வைத்தியர் ஷாபியின் மீது அபாண்டங்களைச் சுமத்தினீர்களே. இந்த நாடாளுமன்றத்தை அடித்து உடைத்து, சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்தீர்களே! இதெல்லாம் அடாவடித்தனம் அல்லவா?

இன்று அப்பாவி இளைஞர்கள், தங்களுடைய பசிக்காக, தங்களுடைய பிள்ளைகளின் பால்மாவுக்காக பாதையிலே அழுது புலம்புகிறார்கள். அவர்களுடைய கோஷத்தை அடக்குவதற்காக, நேற்று இங்கிருக்கும் அமைச்சர் ஒருவர் "வாருங்கள் மோதிப் பார்ப்போம்" என்று கூறுகிறார். கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கும் இந்த அமைச்சர்கள்தான், இன்று கோட்டாபயவை பதவி விலக வேண்டாம் என்று கூறுகின்றார்கள்.

ஐந்து வருடங்கள் மக்கள் ஆணை தந்தார்கள். மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு வீரனாக, கடவுளாக பார்த்தார்கள். அதே மக்களால்தான், இந்த நாட்டின் வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயே எந்தவொரு ஜனாதிபதியும் கேவலப்படாத அளவுக்கு கேவலப்படுத்தப்படுகின்ற ஒருவராக, கோட்டாபய ராஜபக்ஷ இன்று இருந்துகொண்டிருக்கிறார். எனவே, மக்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளியுங்கள்.

"நீங்கள் அமைச்சுப் பதவிகளை பொறுப்பெடுங்கள்" என்று இங்குள்ளவர்கள் கூறுகின்றனர். பதவிகளுக்காக எதிர்க்கட்சி இங்கு பேசவில்லை. எதிர்க்கட்சியிடம் திட்டமிருக்கின்றது. இன்று கோட்டாபய ராஜபக்ஷ வேண்டாம் என்று சொல்லும் பாதையில் உள்ள மக்கள், அவருக்கு கீழே எந்த அமைச்சர்கள் வந்து அமர்ந்தாலும், ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எனவே, நீங்கள் சிந்தித்து நியாயமான ஒரு முடிவை மேற்கொள்ளுங்கள். எல்லோரும் சேர்ந்து அவசரமாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பொருத்தமான, பஞ்சத்தை போக்கக்கூடிய, நாட்டில் நிரந்தர அமைதியைக் கொண்டுவரக் கூடிய நல்லதொரு பொருளாதாரக் கொள்கையை கொண்டுவாருங்கள். அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு எதிர்க்கட்சி தயாராக இருக்கிறது" என்று கூறினார்.

# தலவாக்கலையில் மக்கள் அலை; அரசுக்கு எதிராக பாரிய போராட்டம்



(பீ. கேதீஸ்)



தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் அரச எதிர்ப்பு மக்கள் பேரணியும் ஆர்ப்பாட்டமும் தலவாக்கலையில் நேற்று (07) வியாழக்கிழமை இடம்பெற்றது.

மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளைக் கவனத்திற்கொள்ளாத அரசாங்கத்திற்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இந்தக் கண்டனப் பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஸ்ணன் மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

தலவாக்கலை சுற்றுவட்டத்திற்கு முன்பாக ஆரம்பித்த மக்கள் பேரணி, ஹட்டன் - நுவரெலியா பிரதான வழியாக சென்று திரும்பி பின்னர் கொத்மலை வீதியாக வந்து தலவாக்கலை நகர விளையாட்டு மைதானத்தில் அணிதிரண்டு அங்கு போராட்டத்தில் ஈடுபட்டது. தலவாக்கலை நகர வர்த்தகர்களும் வர்த்தக நிலையங்களை மூடி போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

# விசேட பஸ் சேவை இன்றுமுதல் ஆரம்பம்

எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு இன்றுமுதல் எதிர்வரும் 15ஆம் திகதிவரையில் விசேட பஸ் சேவையை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு, பெஸ்டியன் மாவத்தை பிரதான பஸ் நிலையத்துக்கு மேலதிகமாக கடவத்தை, கடுவலை மற்றும் மாக்கும்புர உள்ளிட்ட நிலையங்களிலிருந்தும் இந்த விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, நாளை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவையானளவு எரிபொருள் கிடைக்கப்பெறாவிட்டால், புத்தாண்டு பஸ் சேவையினை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்படும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

அதேநேரம், சித்திரை புத்தாண்டு காலத்தில் ரயில் சேவைகள் இடம்பெறாதென வெளியாகியுள்ளதான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் அதிகளவான ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# வவுனியாவில் விற்பனை கண்காட்சியும் சந்தையும்







(வவுனியா செய்தியாளர்)

புதுவருட தினத்தை முன்னிட்டு எமது உற்பத்திகள் - எமது வரப்பிரசாதம் என்னும் தொனிப்பொருளில் விற்பனைக் கண்காட்சியும், விற்பனை சந்தையும் வவுனியாவில் இடம் பெற்றன.

சமுர்த்தி அபிமானி திட்டத்தின்கீழ் வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக வளாகத்தில் நேற்றுக் காலை குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர அதிதியாக கலந்துகொண்டு கண்காட்சி மற்றும் விற்பனை நிலையத்தை திறந்துவைத்தார்.

இதில் வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் உற்பத்திப் பொருட்களான புடவைகள், மரக்கறி வகைகள், அலங்காரப் பொருட்கள், இனிப்புப் பண்டங்கள், எண்ணெய் வகைகள், பொம்மைகள் என்பன விற்பனை செய்யப்பட்டன.

சமுர்த்தி திட்டத்தின்கீழ் பயன்பெற்று உற்பத்தியை மேற்கொள்பவர்கள், பெண் முயற்சியாளர்கள், பிரதேச சிறு முயற்சியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்தனர்.

இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் திருமதி பத்மரஞ்சன், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பிறைசூடி, உதவி பிரதேச செயலாளர் சஜீவன் பிரியதர்சினி, பிரதேச செயலக தலைமை சமுர்த்தி முகாமையாளர் திருமதி சந்திரகுமார், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் இணைப்பாளர் டினேஸ், அரச அதிகாரிகள், சமுர்த்திப் பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# கடன்நிலைபேற்றுத்தன்மை தொடர்பான ஆலோசனைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள்

பலதரப்பு விவகாரங்கள் மற்றும் கடன் நிலைபேற்றுத்தன்மை தொடர்பான ஜனாதிபதி ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக புகழ்பெற்ற நிதி மற்றும் பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும், பொதுநலவாய செயலகத்தின் பொருளாதார விவகாரப் பிரிவின் முன்னாள் பணிப்பாளருமான கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திப் பயிற்சி தொடர்பான பேராசிரியர் மற்றும் உலக வங்கியின் முன்னாள் தலைமைப் பொருளாதார நிபுணர், பேராசிரியர் சாந்தா தேவராஜன், நிறுவனத் திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆபிரிக்க திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி திருமதி ஷார்மினி குரே ஆகியோர் இந்த ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக செயற்படுவார்கள்.

ஜனாதிபதியைச் சந்தித்த ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல் மற்றும் உரிய தேவைகளுக்காக தொடர்ந்தும் தொடர்பாடல்களைப் பேணுதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புபட்டுள்ள இலங்கையின் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தல், தற்போதைய கடன் நெருக்கடிக்குத் தீர்வுகாணல் மற்றும் இலங்கையின் நிலையான மீட்சிக்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குதல், ஜனாதிபதி ஆலோசனைக் குழுவின் பொறுப்புகளாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது

# மனித உரிமைகள் தொடர்பில் மன்னாரில் விசேட கருத்தரங்கு



(மன்னார் செய்தியாளர்)



மனித உரிமைகள் தொடர்பான விசேட கருத்தரங்கு மன்னாரில் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடமாகாண பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் கலந்துகொண்டு அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான கருத்துகளை வழங்கினார்.

இதன்போது மனித உரிமைகள் குறித்தும், காணி பிணக்குகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

மன்னார் மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 30 பேர் தெரிவுசெய்யப்பட்டு குறித்த கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ஜோன்சன், மன்னார் நகரசபை உறுப்பினர்கள், மன்னார் மனித உரிமை செயல்பாட்டாளர்கள், மன்னார் சிவில் சமூக அமைப்பினர் மற்றும் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் கடத்திய இந்தியப் பிரஜை கைது

மனித உரிமைகளுக்காக முன்நிற்கும் ஊடகவியலாளராக சித்திரித்துக்கொண்டு பாரியளவில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த ஒருவரை பொலிஸார் கொழும்பில் கைது செய்துள்ளனர்.

இந்திய நாட்டவரான குறித்த நபர் இலங்கையில் மனித உரிமைகள் அமைப்பின் ஊடகவியலாளர் என தன்னை வெளிப்படுத்திக்கொண்டு நீண்டகாலமாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். அவரிடமிருந்து ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதிகொண்ட போதைப்பொருள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து போதைப்பொருளை இலங்கைக்கு எடுத்துவந்து கொழும்பின் பல பகுதிகளுக்கு வர்த்தகம் செய்யும் செயல்பாட்டில் சந்தேகநபர் ஈடுபட்டு வந்துள்ளார். மனித உரிமைகள் அமைப்பின் ஏற்பாட்டாளர் மற்றும் ஊடக அடையாள அட்டையை பயன்படுத்திக்கொண்டு இந்த செயல்பாட்டை முன்னெடுத்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப் பட்ட போதைப்பொருட்களில் 8 கிலோ 583 கிராம் ஐஸ் ரக போதைப்பொருளும் உள்ளடங்குவதாக தெரியவந்துள்ளது. கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# புத்தாண்டுக்கு முன்னர் அரச ஊழியர்களுக்கு சம்பளம்

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் எந்தவிதமான சிக்கல்களும் இல்லை என அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சர், மத்திய வங்கி ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் இதுவரையிலும் நியமிக்கப்படாததன் காரணத்தினால், புத்தாண்டுக்கு முன்னர் சம்பளம் வழங்குவது சாத்தியமற்றது என்று சில தரப்பினர் கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை முன்னைய வருடங்களைப் போன்றே குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் வழங்கநடவடிக்கைஎடுப்பதாக அரசசேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார். இதன்படி, சம்பளம் வழங்கும் திகதி அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 / www.elections.gov.lk



வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவின் முதல் நாளான கொடியேற்றம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஏப்ரல் 08ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# கஜேந்திரகுமாரின் காத்திரமான கருத்துகள்!

இலங்கையின் நெருக்கடி நிலை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பல விடயங்களை ஆழமாக சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இன்று இலங்கை அரசு எதிர்கொண்டுள்ள நெருக்கடியானது, ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் (Government) மீதுள்ள நெருக்கடிபோன்று தோன்றினாலும், உண்மையில் இலங்கை அரசே (State) நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது.

ஏனெனில், எதிர்வரும் நாட்களில் இந்த அரசாங்கம் எதிர்கொள்ளும் நிர்ப்பந்தங்களால், பதவியிலிருந்து விலகுவதாக முடிவெடுத்தாலும் கூட, புதிதாக ஆட்சிக்கு வருபவர்கள், அவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தாலும், துண்டம் துண்டமாக சிதைந்துபோயிருக்கும் இந்த இலங்கை அரசின் சிதிலங்களை பொறுக்குவதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருக்கும். ஆகவேதான், இது வெறுமனே அரசாங்கத்தின் நெருக்கடி என விவரிக்காது, இதனை இலங்கை அரச கட்டமைப்பின் நெருக்கடி என்று விவரிப்பதாக கூறுகிறார் கஜேந்திரகுமார். அதுதான் நிலைவரம்.

***"இன்று நாடாளுமன்றத்துக்கு வெளியில், சாதாரண கிராமங்களிலும், பெரும் நகரங்களிலும், பெரும்பாலும் தெற்கிலும், ஏன் வடக்கு, கிழக்கிலும் கூட மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள்.***

***ஆட்சி செய்யும் இந்த அரசாங்கம் அதன் கடமையினை ஆற்ற முடியாது தோல்வியடைந்திருப்பதனாலேயே இந்த நிலைமை உருவாகியிருக்கிறது.***

***ஆட்சிசெய்வதற்கான திறமையில்லாதமையாலேயே இந்த அரசாங்கம் தோல்வியடைந்திருக்கிறது.***

***அரசாங்கம் தவறுகளைச் செய்கிறபோது, அதுவும் அத்தவறுகள் வெளிப்படையாகத் தெரிகிறபோது, என்னவிதமான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதனை எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டியிருந்தன. ஆனால், இந்த அரசாங்கம் அவற்றை கவனத்தில் எடுப்பதேயில்லை எனவும் முடிவெடுத்திருந்தது. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக்கொண்டிருப்பதனாலும், ஜனாதிபதி 1.3 மில்லியன் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றிபெற்றமையினாலும் தாங்கள் எதனையும் செய்யலாம், அவற்றைச் செய்துவிட்டு தப்பிவிடலாம் என அவர்கள் எண்ணினார்கள். இந்த வாக்குப்பலத்தை வைத்து எதனையும் செய்யமுடியும் என அவர்கள் எண்ணியதால், இலங்கை அரச கட்டமைப்பானது வரலாற்றில் எப்போதும் இல்லாதவகையில் நெருக்கடிக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது.***

***இத்தோல்வியை மக்கள் பட்டவர்த்தனமாக விளங்கிக்கொண்டுள்ளார்கள். ஆதலால்தான் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பெருமளவு வாக்குகளை வழங்கி, வெற்றிபெறச் செய்த மக்களே, இந்த நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெற்றுக்கொடுத்த அவர்களே, இன்று வேறு வழிவகை தெரியாமல் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளார்கள். அதன்மூலம் இந்த அரசாங்கத்திற்கு வழங்கிய ஆணையை மீளப்பெற்றுள்ளார்கள். அதனை இந்த அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்கள்.***

***ஜனாதிபதி தான் உடனடியாகப் பதவி விலகுவார் என்பதனை உத்தரவாதப்படுத்தும் வகையில் ஜனாதிபதி அறிவிப்பினை மேற்காள்ளவேண்டும். இரண்டாவதாக, இந்த அரசாங்கமும் பதவி விலகுவதாக உறுதியளிக்க வேண்டும். மூன்றாவதாக, அடுத்த மூன்று மாதத்திற்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதி ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இம்மூன்று உத்தரவாதங்களும் வழங்கப்படுமாயின், அடுத்த மூன்று மாதங்களில் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதனை நாங்கள் அமர்ந்திருந்து சிந்திக்கலாம்.***

***உண்மை என்னவென்றால், இப்போதுள்ள சூழ்நிலையில் அரசாங்கத்தை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள்கூட விரும்பவில்லை. அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான எண்ணிக்கையான உறுப்பினர்கள் அவர்களிடமிருப்பதாக அவர்கள் உணரவில்லை.***

***இன்றைக்கு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் பொதுமக்களிடம் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். இந்த நாட்டின் வரலாற்றில் முதற்றடவையாக, பொருண்மியப் பிரச்சினைகளுக்காக மட்டுமன்றி, இந்த அரசாங்கமும், அரச கட்டமைப்பும் எவ்வாறு நடந்துகொள்கின்றன என்பவற்றுக்கு எதிராகவும் போராடுகிறார்கள்.***

***முதற்றடவையாக, இராணுவ பலமும், இந்த அரச கட்டமைப்பின் பெரும் பலமும் அவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இது எவ்வளவு ஆபத்தானது என்பதனையும், அவர்கள் குரலற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும் அவர்கள் உண்ர்ந்துள்ளார்கள்.***

***ஆட்சிக் கட்டமைப்பிலுள்ள அரசியல்வாதிகள் தங்களைப் பற்றியே சிந்திக்கிறார்கள், இவ்வரசியல்வாதிகள் உண்மைக்குப் புறம்பான விடயங்களை தெரிவித்து வருகிறார்கள். இது கடந்த ஒருசில வருடங்களாக அல்ல, பல தசாப்தங்களாக நடைபெறுகிறது. எனவே, மக்கள் தாம் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதனை உணர்ந்துகொள்வார்கள்.***

***வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக 74 வருடங்களாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். அவர்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களும் நாட்டின் சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்பதனை உணர்நதே அவர்கள் வீதிக்கு வந்திருக்கிறார்கள்.***

***இது இந்த நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பொன்னான சந்தர்ப்பம். இலங்கை நாடானது இந்தத் தீவிலுள்ள எல்லா மக்கள் குழுமங்களையும் பிரதிநிதித்துப்படுத்துவதான ஒரு புதிய ஆரம்பத்திற்கான நல்ல சந்தர்ப்பமிது. சிங்களம் பேசும் தேசமாக, தமிழ் பேசும் தேசமாக இலங்கையில் மாறுபட்ட அடையாளங்களைக் கொண்டாடுவதற்கான நல்ல சந்தர்ப்பம். இந்த உண்மை நிலைமையை கவனத்திலெடுக்கத் தவறக்கூடாது. வரலாற்றில் முதற்றடைவையாக இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ்மக்கள் ஆதரவளிக்கத் தயாராகவிருக்கிறார்கள். அதற்காக நீங்கள் எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.***

***விடுதலைப் புலிகளை நீங்கள் அழித்தற்குப் பின்னரும், கடந்த பன்னிரண்டு வருடங்களாக, அதே அரச கட்டமைப்பைத் தொடர்கிறீர்கள். கடவுளின்பேரால் கேட்கிறேன் விழித்தெழுங்கள். உங்கள் தலைவர் கூட்டாட்சி முறைமை என்பது பிரிவினைவாதம் என்று பொய் கூறி உங்களை ஏமாற்றியே வந்துள்ளார்கள்.***

***அம்பாந்தோட்டை மாவட்டத்தை மேம்படுத்துவதற்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சிக்கு வரவேண்டியுள்ளது. இதுபோன்று நாட்டின் இதர பகுதிகள் மேம்படுத்தப்பட வேண்டாமா? நாட்டின் எல்லாவிடங்களும் மேப்படுத்தப்பட வேண்டுமானால் ஒற்றையாட்சி முறைமை என்ற கருதுகோளை நீங்கள் கைவிடவேண்டும். தமிழ்த் தேசத்தையும் சிங்கள தேசத்தையும் அங்கீகரிக்கும் கூட்டாட்சி முறைமைதான் இதற்கு ஒரே வழி என்பதனை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அதுவே நாட்டை முன்னேற்ற ஒரே வழி"*** என்று தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நாட்டின் இன்றைய நிலைமையுடன் ஒப்பிடுகையில், கஜேந்திரகுமார் எம்.பியின் கருத்துகள் சிங்கள மக்களுக்கு யதார்த்தத்தை சொல்லியிருக்கிறது. நாட்டில் என்ன பிரச்சினை நடந்தாலும் வீடுகளுக்குள் இருக்கும் கொழும்பு உயர்மட்ட சிங்கள சமூகத்தினர் கூட இன்று வீதிகளில் இறங்கி ஆங்கிலத்தில் பேசி தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றனர்.

சிங்கள மக்கள் இன்று தமது நிலைமையை அறிந்து தமிழர்கள் பட்ட கஷ்டங்களை புரிந்துகொண்டிருப்பார்கள் என்பது என்னவோ உண்மைதான். ஆனால், சிங்கள மக்கள் சிங்கள தேசியவாதத்திற்கப்பால் சென்று யதார்த்தத்தை புரிந்துகொள்வார்களா என்பது தெரியவில்லை.

போருக்கு முன்னரும் போருக்குப் பின்னரும் நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருந்தாலும் தமிழர் பிரச்சினை தீர்வு விடயத்தில் சிங்கள மக்களின், சிங்கள அரசியல்வாதிகளின் மனநிலையில் மாற்றம் வரவில்லை. ஆனால், இப்போது தமது வாழ்வியலே பாதிக்கப்பட்டுள்ளதால் வீதிக்கு இறங்கியுள்ள சிங்கள மக்கள், ஆட்சியாளர்களை அல்லது தமது அரசியல் தலைவர்களை இனியும் வைக்கவேண்டிய இடத்தில் வைப்பார்களா அல்லது இனவாத பேச்சுகளை நம்பி பழைய குட்டையில் ஊறிவிடுவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.



# ராஜபக்ஷ: இலங்கையின் குடும்ப அரசியல் ஒரு பார்வை

2010-15 காலகட்டத்தில் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக பதவியேற்றார் மஹிந்த ராஜபக்ஷ. அப்போது அமைச்சரவை இல்லாமல், 40இற்கும் மேற்பட்ட அவருடைய குடும்ப உறுப்பினர்கள் அரக பதவிகளில் பொறுப்பேற்றனர்.

இலங்கையின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்ட பதவிகளை வகிக்கும் ராஜபக்ஷ குடும்பத்தினர் அந்நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கும் அம்பாந்தோட்டையைச் சேர்ந்தவர்கள். ஜனாதிபதி கோட்டாபய, சமல் மற்றும் பிரதமர் மஹிந்த ஆகியோர் அக்குடும்பத்திலிருந்து வரும் மூன்றாம் தலைமுறை வாரிசுகள். சமல் மற்றும் மஹிந்தவின் மகன்கள் முறையே சசிந்திர, யோசித்த மற்றும் நாமல் ஆகியோர் நான்காம் தலைமுறை அரசியல் வாரிசுகளாக களமிறங்கியுள்ளனர்.

தெற்காசியாவில் இதுபோன்ற வாரிசு அரசியல் எந்த நாட்டிலும் நடைபெறவில்லை. 2010-15 காலகட்டத்தில் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக பதவியேற்றார் மஹிந்த ராஜபக்ஷ. அப்போது அமைச்சரவை இல்லாமல், 40இற்கும் மேற்பட்ட அவருடைய குடும்ப உறுப்பினர்கள் அரசு பதவிகளில் பொறுப்பேற்றனர். மஹிந்த ராஜபக்ஷவின் அரசு முடிவுக்கு வந்த பின்பு அவர்களில் பலரும் மோசடி விசாரணைகளை எதிர்கொண்டனர். அமெரிக்க குடியுரிமை பெற்ற பெசில் கைதுசெய்யப்பட்டு அவரது மனைவி மற்றும் மூத்த மகளிடம் விசாரணை நடத்தப்பட்டது.

கோட்டாபய மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 11 பேர் அமைச்சரவையில் இடம்பெற்றனர். இதர குடும்ப உறுப்பினர்கள் பிரதமர் மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றினார்கள். ஒருவர் தற்போது இலங்கை தூதராக லொஸ் ஏஞ்சல்ஸில் பணியாற்றிவருகிறார்.

**ஆரம்பம்**

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலின் மூலம் உருவாக்கப்பட்ட முதல் நாடாளுமன்றத்தில் இரண்டு ராஜபக்ஷவினர் இடம்பெற்றனர். அவர்களில் ஒருவர் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தந்தையாவார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (SFLP) ஸ்தாபக உறுப்பினரான டொன் அல்வின் ராஜபக்ஷ இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அப்போது கட்சி, கொழும்பின் புறநகர்ப் பகுதியில் இருந்த வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒக்ஸ்பார்ட் பல்கலைக்கழகத்தில் படித்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க கையில் இருந்தது. அவர் 1959ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட பிறகு அவருடைய மனைவி சிறிமாவோ பொறுப்பேற்றுக்கொண்டார்.

1994இல் சிறிமாவோ பண்டாரநாயக்கவிடமிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை சந்திரிகா குமாரதுங்க பெற்றபோது, மஹிந்த ராஜபக்ஷ 20 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் ஈடுபட்டிருந்தார். ஆனால், அவர் குமாரதுங்கவின் தலைமைக்கு எந்த வகையிலும் இடையூறாக இருக்கவில்லை. சந்திரிகா இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்தபோது மஹிந்த அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தார். அவருடைய மூத்த சகோதரர் சமல் மற்றும் உறவினர் நிருபமா உள்ளிட்ட மற்ற குடும்ப உறுப்பினர்கள் பலரும் அரசியலில் ஈடுபட்டவண்ணம் இருந்தனர்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பு மனுவை தாக்கல் செய்தார் மஹிந்த ராஜபக்ஷ. குமாரதுங்க அரசியலிலிருந்து விலகிய பிறகு இது நடைபெற்றது. பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்த கோட்டாபயவின் தலைமையில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்கும் முயற்சியில் உறுதியாக இருந்தார் மஹிந்த ராஜபக்ஷ.

2009ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கையில் கொல்லப்பட்ட பிறகு-காணாமல்போன பிறகு ராஜபக்ஷக்களுக்கு திரும்பிப் பார்க்க நேரமில்லை. சகோதரர்களின் தலைமையில்,

(11ஆம் பக்கம் பார்க்க....)




## தவக்கால சிந்தனை



**இறைமகன்!**

யூதர்கள் இயேசுவின்மேல் எறிய கற்களை எடுத்தபோது, இயேசு அவர்களைக் கேள்வி கேட்கிறார். அதற்கு அவர்கள் அளிக்கின்ற பதில், 'இறைவனைப் பழித்துரைத்தற்காகவே உன் மேல் கல் எறிகிறோம்". '

எனவே, இயேசு மறைநூலை அவர்களுக்கு மேற்கோள் காட்டுகிறார்: 'நீங்கள் தெய்வங்கள். நீங்கள் எல்லாரும் உன்னதரின் புதல்வர்கள்' 'கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள்' என்று சொல்லி, தாம் 'இறைமகன்'தான் என்று தம் நிலையை நியாயப்படுத்துகிறார்.

இயேசுவின் நிலைப்பாட்டின்படி நாம் அனைவருமே இறைமக்கள்தானே, தெய்வத் தன்மை உடையவர்கள்தானே! கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டவர்கள், கடவுளுடைய வார்த்தையை வாழ்ந்துகாட்டுபவர்கள் இறைவனின் பிள்ளைகள். எனவே, நமது கடப்பாடு பெரிதாகிறது. இறைவார்த்தையின்மீது ஆர்வம் உடையவர்களாக மட்டுமிராமல், அவ்வார்த்தையின்படி வாழ்கிறவர்களாவும் இருந்து, 'இறைமக்கள்' என்னும் பெயருக்குத் தகுதியுடையவர்களாக நம்மை மாற்றிக்கொள்வோமாக!

## நக்கல் நமசிவாயம்

**அமைச்சரவை இல்லாமல் ..ஏன் நிதியமைச்சர்கூட இல்லாமல் நாடு இயங்குதெல்லே...இப்படியே இருந்தாலும் பரவாயில்லை போலக் கிடக்குது...**



## இன்றைய நாளில்...

- ★ 1906 – அல்சைமர் நோயினால் பாதிக்கப்பட்ட முதலாவது நபர் இறந்தார்.
- ★ 1911 – டச்சு இயற்பியலாளர் எயிக் ஆன்ஸ் மீக்கடத்துதிறனைக் கண்டுபிடித்தார்.
- ★ 1924 – இஸ்லாமிய நீதிமன்றங்கள் துருக்கியில் இல்லாதொழிக்கப்பட்டன.
- ★ 1993 – மக்டோனியக் குடியரசு ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.

# கெப்-முச்சக்கரவண்டி மோதி தாய், தந்தை, மகள் பலி

## தனமல்விலவில் சம்பவம்





தனமல்வில பொலிஸ் பிரிவில் நேற்று (07) இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக தனமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தை, தாய் மற்றும் மகள் ஆகிய மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் விபத்துக்கான காரணம் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தனமல்வில பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனமல்வில, உடவலவ வீதியில் மூன்றாம் மைல்கல் பிரதேசத்தில் நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த கெப் ரக வாகனம் முச்சக்கர வண்டியொன்றின் மீது நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பதுளை பிரதேசத்தை வதிவிடமாக கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகள் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துடன் தொடர்பில் குறித்த கெப் ரக வாகனத்தின் சாரதி தனமல்வில பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துக்கான காரணத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

## 07.04.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 120 04 | 130 683 |
| கனேடியன் டொலர் | 135 1324 | 145 6368 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 37 4183 | 4 614 |
| யூரோ | 23 4814 | 241 1 82 |
| ஜப்பான் யென் | 1 4 45 | 1 5 8 |
| சிங்கப்பூர் டொலர் | 117 3122 | 125 7488 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 4 3207 | 31 133 |
| சுவிஸ் பிரான்ங் | 221 533 | 234 3 55 |
| ஐ.அ.டொலர் | 2 8 27 1 | 208 8860 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 684 0737 |
| குவைட் | குவைட் தினார் | 872 6871 |
| ஓமான் | ஓமான் றியால் | 667 6126 |
| கட்டார் | கட்டார் றியால் | 71 4 4 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 68 8176 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 70 5138 |

# பொலிஸ் - இராணுவ அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்த நபர் கைது

பொலிஸ் அதிகாரிகளையும் இராணுவ அதிகாரிகளையும் தாக்க வேண்டும் அல்லது கொலை செய்ய வேண்டுமென சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட நபரொருவர் நேற்று முன்தினம் (06) நாகொடை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாகொடை, தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் பத்தேகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தநிலையில், அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கடந்த 06 வருடங்களுக்கு முன்பிருந்து போதைப்பொருளுக்கு அடிமையாகி அதன் பின்னர் அவர் மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் சந்தேகநபர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அந்த சந்தர்ப்பத்தில், வைத்தியசாலையிலிருந்து தப்பித்துச் சென்றுள்ளமையும் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை நாகொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இஸ்லாமிய ஆன்மீக தலைவர் காலமானார்

(பீ.எம் முக்தார்)



அரேபியாவின் புனித மக்காவில் உள்ள பைதுல் பாஸி யில் கடந்த 6 ஆம் திகதி ஸவுதி காலமான பிரபல இஸ்லாமிய அறிஞரும் அகில உலக ஷாதுலிய்யதுல் பாஸிய்யா தரீக்கா வின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நஜ்முல் உலமா அஷ் ஷெய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அன்னவர்களுக்காக ஷாதுலிய்யா தரீக்காவை பின்பற்றும் ஊர்களில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் ஷாதுலிய்யா ஸாவியாக்களில் காயிபான ஜனாஸா தொழுகை நடத்தி துஆப் பிரார்த்தனை புரியுமாறு ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கை தலைமை பீடமான கொழும்பு உம்மு ஸாவியாவில் நிர்வாக சபை தலைவர் தேசபந்து அல் ஹாஜ் மக்கி ஹாஷிம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு உம்மு ஸாவியாவில் நேற்று 7 ஆம் திகதி தராவிஹ் தொழுகையின் பின்னர் அன்னாருக்காக காயிபான ஜனாஸா தொழுகையும் துஆப் பிரார்த்தனையும் நடத்தப்பட்டதாக மேற்படி ஸாவிய்யா நிர்வாக சபை சமய விவகார குழுத் தலைவரும் பலஸ்தீன நாட்டின் முன்னாள் இலங்கை தூதுவருமான அல் ஹாஜ் பௌஸான் அன்வர் தெரிவித்தார்.

ஆன்மீகத் தலைவரின் திடீர் மறைவு குறித்து தேசபந்து அல் ஹாஜ் மக்கி ஹாஷிம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளார். அத்தோடு பலஸ்தீன நாட்டின் முன்னாள் இலங்கைத்தூதுவரும் அனுதாபச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.

பேருவளை சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்தின் கீழ் உள்ள மஸ்ஜிதுகள் மற்றும் ஷாதுலிய்யா ஸாவியாக்களில் இன்று 8 ஆம் திகதி ஜும்ஆ தொழுகையைத் தொடர்ந்து காயிபான ஜனாஸா தொழுகையும் துஆப் பிரார்த்தனையும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் மற்றும் வாகனங்களை நிறுத்தி ஏ9 வீதியின் குறுக்கே போராட்டம்



(வவுனியா செய்தியாளர்)



வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் எரிபொருள் வழங்குவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பஸ் உள்ளிட்ட வாகனங்களை ஏ9 வீதியின் குறுக்கே நிறுத்தி சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டமையினால் ஏ9 வீதியூடான போக்குவரத்து சுமார் 45 நிமிடங்கள் வரை முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஈரப்பெரியகுளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு டீசலை பெற்றுக்கொள்வதற்காக வாகனங்கள் காத்திருந்தபோது டீசல் நிறைவடைந்துள்ளதாக எரிபொருள் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். டீசல் இருந்த போதிலும், தற்போது டீசல் நிறைவடைந்து விட்டதாக எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கூறுவதாக தெரிவித்து சாரதிகள் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஏ9 வீதியின் குறுக்கே இரு பஸ்களை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஏ9 வீதியின் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்ததுடன், நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருந்தன. சம்பவ இடத்திற்கு ஈரப்பெரியகுளம் பொலிஸார் உடனடியாக வருகை தந்து எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருடன் கலந்துரையாடினார். அத்தியாவசியத் தேவைக்காக டீசல் இருப்பதாக இதன்போது முகாமையாளர் தெரிவித்தார். இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய தேவைகளுக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த 2500 லீற்றர் டீசல் வாகனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனையடுத்து போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமையடுத்து ஏ9 வீதியின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.

# காவத்தையில் பஸ் விபத்து: மூவர் வைத்தியசாலையில்



காவத்தை, வடாபொத்த வீதியில் தனியார் பஸ் ஒன்று 150 அடி பள்ளத்துக்குள் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் காயங்களுக்குள்ளான மூவர் காவத்தை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காவத்தை, வடாபொத்த தோட்டம், 498 என்ற வீதி இலக்கத்தினூடாக காவத்தைக்கு பயணிக்கும் தனியார் பஸ் கோளாறு காரணமாக, வடாபொத்த தோட்டத்தில் வைத்து நேற்று முன்தினம் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக காவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பஸ் விபத்துக்குள்ளான சந்தர்ப்பத்தில் அதில் 09 பயணிகள் மத்திரமே பிரயாணம் செய்துள்ளனர். காயங்களுக்குள்ளான இருவர் காவத்தை ஆதார வைத்தியசாலையிலும் ஒருவர் நிவித்திகல வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஷாதுலிய்யா தரீக்கா உலக ஆன்மீகத் தலைவரின் மறைவுக்கு இம்தியாஸ் எம்.பி. அனுதாபம்

(பீ.எம். முக்தார்)

அகில உலக ஷாதுலிய்யதுல் பாஸிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நஜ்முல் உலமா அஷ் ஷெய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அன்னவர்களின் திடீர் மறைவு ஷாதுலிய்யா தரீக்காவிற்கு ஈடுசெய்ய முடியாத மாபெரும் பேரிழப்பாகும் என முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது - இறையடி சேர்ந்த சங்கைக்குரிய ஷேகு நாயகம் அஹ்லுல் பைத் பரம்பரையில் சேர்ந்தவர். ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காக உலகளாவிய ரீதியில் அவர் ஆற்றிய பணிகள் மகத்தானது.

ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னேற்றத்திற்காக அன்னார் சிறந்த தலைமைத்துவத்தை வகித்து உலகளாவிய ரீதியில் ஷாதுலிய்யா தரீக்காவை பின்பற்றும் நாடுகளுக்கு அவ்வப்போது விஜயம் செய்து ஷாதுலிய்யா இஹ்வான்களுக்கு சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்தார்.

ஷாதுலிய்யா தரீக்காவின் இஹ்வான் என்ற வகையில் இறையடி சேர்ந்த ஷேஹ் நாயகம் என்னோடு மிகவும் நெருக்கமாகவும் அன்பாகவும் பழகினார். 2004 ஆம் ஆண்டு அன்னார் இலங்கைக்கு விஜயம் செய்து பல ஊர்களுக்குச் சென்று இஹ்வான்களை சந்தித்தார். அந்த வகையில் அராபியர் முதலில் காலடி எடுத்துவைத்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளைக்கும் விஜயம் மேற்கொண்டார். நான் மக்கள் தொடர்பாடல் அமைச்சுப் பதவியை அப்போது வகித்தேன். ஷாதுலிய்யா தரீக்காவின் ஞாபகார்த்தமாக ஷாதுலிய்யா கோட்டை என வர்ணிக்கப்படும் சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் ஞாபகார்த்த முத்திரையொன்று அன்னாரின் கரங்களினால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தலைசிறந்த ஆளுமை கொண்ட அன்னார் ஸவுதி அரேபியாவில் புகழ்பெற்றவராக திகழ்ந்தார். சிறந்த அறிவும் ஆன்மீக பரிபக்குவமும் சிறந்த தலைமைத்துவ பண்புகளும் நிறைந்த அன்னாரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு பெரும் கவலையடைந்தேன்.

புனித இஸ்லாத்திற்காகவும், ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காகவும் அன்னார் ஆற்றிய தியாகமிகு பணிகள் என்றும் மறக்கமுடியாதது.

அன்னார் உலகில் வாழும் போது செய்த நற்பணிகளை அங்கீகரித்து ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை இருகரம் ஏந்தி பிரார்த்திக்கின்றேன்.

# அடுத்த ஆண்டுக்கான சம்பளத்தை கைவிட ஹரின் எம்.பி. தீர்மானம்

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, அடுத்த வருடத்துக்கான தனது நாடாளுமன்ற சம்பளத்தைக் கைவிடுவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதத்தை நேற்று (07) நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு பொதுமக்களுக்கு சில தியாகங்களைச் செய்ய வேண்டிய கடமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது.

அடுத்த ஒரு வருடத்துக்கு நான் எனது நாடாளுமன்ற சம்பளத்தை பெற்றுக்கொள்ளமாட்டேன். நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் உணவு உட்கொள்ள



மாட்டேன்.

எமது பொருளாதாரம் மற்றும் நாட்டின் சுமையைக் குறைக்க இந்தக் கடினமான காலங்களில் அரசாங்க ஊழியர்களாகிய நாம் முடிந்ததைச் செய்ய வேண்டும் என நம்புகிறேன்" என அவர் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

# Dialog Home Broadband பொழுதுபோக்கு மற்றும் கேமிங் ஆர்வலர்களுக்காக பிரத்தியேக டேட்டா திட்டங்களை அறிமுகப்படுத்துகிறது

முடிவில்லாத பொழுதுபோக்குடன் டயலொக் ஹோம் புரோட்பாண்ட் வேகமான மற்றும் நம்பகமான இணைய அனுபவத்தினை வாடிக்கையாளருக்கு கொண்டுவருவதுடன் பொழுதுபோக்கு மற்றும் கேமிங்கிற்கான பல தனித்துவமான, அனைவராலும் பெற்றுக்கொள்ளக் கூடிய கட்டணத்தில் பிற்கொடுப்பனவு மற்றும் முற்கொடுப்பனவு டேட்டா திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

வாடிக்கையாளர்கள் இப்போது Apple TV, Amazon Prime மற்றும் Spotify ஆகியவற்றுக்கு 100GB டேட்டாவுடன் Netflix மற்றும் ViU App க்கு வரையறையற்ற டேட்டாவையும் ரூ. 1,299 மற்றும் வரிகளுக்கு (30 நாட்களுக்கு செல்லுபடியாகும்) பெற்றுக்கொள்ள முடியும். 7-நாள் திட்டமானது ரூ.499 மற்றும் வரிகளுக்கு வழங்கப்படுகின்றது. மேலும் Apple TV, Amazon Prime மற்றும் Spotify ஆகியவற்றிற்கு மேலதிகமாக 20GB ஐயும் Netflix மற்றும் ViU App மூலம் திரைப்படங்கள் மற்றும் டிவி நிகழ்ச்சிகளை பார்வையிட வரையறையற்ற டேட்டாவையும் வழங்குகிறது. மேலும், மியூசிக் டேட்டா திட்டம் வாடிக்கையாளர்களுக்கு 30 நாட்களுக்கு 1010GB Anytime டேட்டாவையும் பிரத்தியேகமாக இசையைக் கேட்டு மகிழ Spotify இணை ரூ.179 மற்றும் வரிகளுக்கும் வழங்குகிறது.

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சிக்கு சொந்தமான துணை நிறுவனமான டயலொக் ஹோம் புரோட்பாண்ட் பிரைவட் லிமிட்டட் கேமிங்கில் ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களுக்காக ரூ. 499/- இலிருந்து கேமிங் டேட்டா திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் தற்போதைய சூழ்நிலையில், அலுவலகம் மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்காக Work & Learn டேட்டா திட்டங்கள் மற்றும் YouTube ஆகியவை வாடிக்கையாளர்களுக்கு ரூ. 495/- என்ற மிக குறைந்த விலையில் கிடைக்கின்றன.

இந்த டேட்டா திட்டங்களை பற்றிய மேலதிக தகவல்களை https://www.dialog.lk/hbb-data-add-ons ஊடாக பெற்றுக்கொள்ளுங்கள்



# நாடாளுமன்றத்தில் நேற்று...

## இன்னல்களுக்கு மக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன்

இன்றைய நெருக்கடிகளுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஒரு பக்கம் மட்டும் குற்றம் சுமத்த முடியாது. இதிலிருந்து எவ்வாறு மீள்வதென்பதே எமக்குள்ள சவாலாகும். மக்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எரிவாயு, எரிபொருள், பால்மா மற்றும் மின்சாரம் இல்லாதபோது மக்கள் கொந்தளிப்பது சாதாரண விடயம். அதில் எனக்குள்ள பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். மக்கள் முகங்கொடுக்கும் இன்னல்களுக்காக மக்களிடம் மன்னிப்பும் கோருகின்றேன்.

போராட்டத்தில் ஈடுபடுவோரின் வேதனை எங்களுக்கு புரிகின்றது. அரசியலமைப்பை மீறி தீர்வை தேடுமாறு கோரினாலும் பின்னர் அதனால் ஏற்படும் பாதிப்பை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு நடந்தால் இனி யாராலும் ஆட்சிசெய்ய முடியாது. வருடத்திற்கு வருடம் மக்கள் வீதிக்கு இறங்குவார்கள். நாங்கள் தற்போது பாரிய நெருக்கடியில் இருக்கின்றோம். யார் வந்தாலும், எந்த தெய்வம் வந்தாலும் பாரிய தியாகங்களை செய்ய வேண்டும்.

மக்களின் வேதனைகள் சாதாரணம். அதனை நாங்கள் முறையாக கையாள வேண்டும். அவர்களுக்கு உண்மையைக் கூறவேண்டும். தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு என்ன. அரசியலமைப்பை மீறினால் பாரிய களேபரம் ஏற்படும். எனவே, சூழ்நிலையிலிருந்து எப்படி சிறந்த முறையில் நாட்டை மீட்டெடுப்பது குறித்து சிந்திக்க வேண்டும். கிளர்ச்சியை முற்றாக நிராகரிப்போம். கிளர்ச்சி பாரிய ஆபத்தை ஏற்படுத்தும்.



அலி சப்ரி எம்.பி.

## அரசின் இயலாமையே நெருக்கடிக்குக் காரணம்

நாங்கள் கூறியபோதே சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றிருந்தால் இன்று இந்த நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்க வேண்டியதில்லை. இந்த நிலைமைக்கு உங்களுடைய இயலாமையே காரணம். நெருக்கடிகள் தெரிந்திருந்தும் ஏன் தீர்வுகளை எடுக்கவில்லை.

நாட்டில் வரி குறைக்கப்பட்டதால் திறைசேரிக்கு வருமானம் இல்லை. எனவே, வரி இல்லாது நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாது. இன்று 8 வீதத்திற்கும் குறைவாக வரி குறைக்கப்பட்டுள்ளது. இதுவே, நெருக்கடிக்கான ஆரம்பமாகும். எனவே, வரி மறுசீரமைப்பு செய்யவேண்டும்.

அதேபோன்று, கடன் சுமையும் இந்த நெருக்கடி காரணமாகும். முன்னர் செலுத்திய 500 மில்லியன் கடன் தொடர்பாக சிந்தித்துப் பார்க்குமாறு அப்போதே கூறினோம். அந்த 500 மில்லியன் டொலரை வைத்திருந்தால் இன்று குறைந்தது பால்மா மற்றும் மருந்துகளை சரி கொண்டுவந்திருக்க முடியும். இந்தக் கடனை செலுத்தியவர்கள் 200 – 300 வீதம் இலாபத்தைப் பெற்றனர். இங்கு ஊழல் இடம்பெற்றதா என்பது குறித்து சுயாதீன விசாரணை செய்ய வேண்டும்.

நாட்டின் நெருக்கடிக்குத் தீர்வு வழங்க பொறுப்புகளை பொறுப்பேற்கத் தயார். ஆனால், பேச்சுவார்த்தை நடத்தி தீர்வைப் பெற முடியும். அதனை முதலில் செய்வோம்.



ஹர்ஷ டி சில்வா எம்.பி.

## ‘கோ ஹோம் கோட்டா – ஆட்சியை கொடு’ என மக்கள் கோரவில்லை

எங்களுடைய கட்சியில் மக்கள் வாக்குகளால் தெரிவுசெய்யாது தேசிய பட்டியலில் உறுப்பினர்களை தெரிவுசெய்துகொண்டமைக்கு நாங்களே எங்களை அடித்துக்கொள்ள வேண்டும்.

மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் உள்ளன. மக்கள் வரிசையில் நிற்கின்றனர். இதனால் வீதிக்கு இறங்கிப் போராடுகின்றனர். அதனை ஏற்றுக்கொள்கின்றோம். போராட்டத்துக்கு வந்தவர்கள் தங்களுக்கு எரிபொருள், எரிவாயு, பால்மா வேண்டும் என்றே கோரினர். ஆனால், பின்னால் வந்தவர்களே கிளர்ச்சியை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

வீட்டுக்கு எரிவாயு வேண்டுமென கோரும் மக்களுக்கு பின்னால் ஆட்சியை கொடு என்ற பதாகையுள்ளது. மக்கள் தங்களுடைய பிரச்சினைக்கே போராடுகின்றனர். ஆனால், அவர்களுக்கு பின்னால் கோ ஹோம் கோட்டா என்றும் ஆட்சியை கொடு என்றும் கிளர்ச்சியை ஏற்படுத்து கின்றனர். இது காலப்போக்கில் ஜனநாயகம் சீர்குலைந்து அராஜக ஆட்சிக்கு வழிவகுக்கும். பிரபாகரன் இருந்த காலத்தில் ஏற்பட்ட நிலைமை மீண்டும் ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். மேல்மாகணத்தை முற்றுகையிடுமாறு கோருகின்றனர். இதில் எந்த உயிரேனும் போனால் யார் பொறுப்புக் கூறுவது. கிளர்ச்சியில் போராடும் மக்கள் பொறுப்புக் கூற வேண்டும்.



ரோஹித அபேகுணவர்தன எம்.பி.

## வாக்குறுதிகளை மீறியதே போராட்டத்துக்குக் காரணம்



கெவிந்து குமாரதுங்க எம்.பி.

வாக்குறுதிகள் வழங்கிவிட்டு தங்களை ஏமாற்றியுள்ளதால் இன்று மக்கள் பாதையில் இறங்கியுள்ளனர். கோ ஹோம் கோட்டா என்பது ஜனாதிபதிக்கு மாத்திரமா? 225 பேரும் வேண்டாம் என்பது தற்போதுள்ள 225 பேரையுமா? மாறாக, முழு அரசியல் கட்சி வியூகத்தையுமே மக்கள் நிராகரிக்கின்றனர். கட்சி அரசியலால் எங்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்காது என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

20ஆவது திருத்தம் கொண்டுவரும்போது ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாதமையே இன்று பாரிய நெருக்கடிக்கு காரணமாகியுள்ளது. அவருக்கு ஆதரவளித்த பங்காளிகளின் கருத்துகளுக்கு செவிசாய்க்காதமையினால் இன்று மக்களின் போராட்டத்துக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

யோ. தர்மராஜ்



## சிங்கள சகோதரர்களே வாருங்கள்; ஒன்றுசேர்ந்து நாட்டை மீட்போம்!

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் வாருங்கள் சிங்கள சகோதர சகோதரிகளே. ஒன்றாக சேர்ந்து நாட்டை மீட்போம். உங்கள் போராட்டத்தை நாங்கள் மதிக்கின்றோம். உங்களைபோன்ற இளைஞர்கள் இப்போதும் சிறையில் தமிழ் அரசியல் கைதிகளாக உள்ளனர். அவர்களையும் சிந்தியுங்கள். நாம் அன்று அழிக்கப்பட்ட போதும் கூட சிங்கள மாணவர்கள், மக்கள் எங்களுக்காக போராடவில்லை. இன்றுதான் நீங்கள் எல்லாவற்றையும் புரிந்துகொண்டீர்கள். வாருங்கள் ஒன்றாக போராடுவோம்.

2009ஆம் ஆண்டு, எங்கள் குழந்தைகள் கொல்லப்பட்டபோது, இங்கே பால்சோறு வழங்கி தேசியக் கொடி வழங்கி மகிழ்ந்தவர்கள் மஹிந்த குடும்பத்தினர். இன்று அதே தேசியக் கொடியை ஏந்திக்கொண்டு மக்கள் அரசுக்கு எதிராக போராடி வருகின்றனர். பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினரிடமே ஒப்படைத்தோம்.



சிறீதரன் எம்.பி.

## மலையக மக்களை ஏமாற்றியதன் சாபமே இது

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார். சத்தியம் தவறாத உத்தமன் போலவே நடிக்கின்றார். சமயம் பார்த்து பல வகையிலும் கொள்ளையடிக்கின்றார்.

பாமர மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கி அவர்களை ஏமாற்றி வீதிக்கு இழுத்த பெருமை இந்த அரசாங்கத்தையே சேரும். மலையக மக்களுக்கு இரட்டிப்பு ஏமாற்றம் கிடைத்தது. தேர்தல் மேடைகளில் மலையக மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளை ஏமாற்றி இன்று வீதிக்கு இறக்கியுள்ளது அரசு.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். மக்கள் கோரும் மாற்றத்தை நிறைவேற்றுங்கள். அனைத்து மக்களின் எண்ணமும் ஒன்றாக இருக்கின்றன. அதனை அரசு நிறைவேற்ற வேண்டும்.

பசி, பட்டினி வறுமையால் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். அரசாங்கம் மலையக மக்களை பச்சை பச்சையாக ஏமாற்றியது. மக்களை ஏமாற்றி பாதைக்கு தள்ளியுள்ளது. மலையக மக்களின் சாபமே இன்றைய நிலைமைக்குக் காரணம்.

மலையகத்தில் கடலோ, விமான நிலையமோ இல்லை. மலையகத்தில் பிறந்து, அங்கே இறப்போம். அவர்களின் போராட்டத்திற்கு நாங்கள் முழு ஆதரவையும் வழங்குவோம்.



வடிவேல் சுரேஸ் எம்.பி.

## மிகைவரிச் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

மிகைவரிச் சட்டமூலம் திருத்தங்களுடன் வாக்கெடுப்பின்றி நேற்று (07) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலம் மூன்றாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதன் பின்னர், நாடாளுமன்ற செயற்குழுவின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே இந்த சட்டமூலத்துக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

நேற்றைய நாடாளுமன்ற விவாதத்தின்போது, ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட சில நிதியங்களில் இந்த வரி அறவிடப்படுவதற்கு தமது கட்சி எதிர்ப்பை வெளியிட்டதாகவும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மிகைவரியை அறவிடும் நடவடிக்கையிலிருந்து விலக வேண்டும் என்று அவரின் கட்சியானால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்ப்பட்டியலும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் எதிர்ப்பை வெளியிடப்போவதில்லை என எதிர்ககட்சியின் பிரதான ஒருங்கிணைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## துறைமுகம், விமானநிலைய அபிவிருத்தி வரிச் சட்டத்தின் இரு விதிமுறைகள் நிறைவேற்றம்

நாடாளுமன்றம் நேற்று கூடியபோது கடந்த ஜனவரி மாதம் 06ஆம் திகதி துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரிச்சட்டத்துக்கமைய நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்ட 2261/58 அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறை மற்றும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி வெளியிடப்பட்ட 2262/19 அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறை ஆகியன அனுமதிக்கப்பட்டுள்ளன.

## ஒரே பார்வையில்...

## எது சரி, தவறு என்பது எங்களுக்கும் தெரியும்

பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாரிய பாதிப்புக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்த ஆளுந்தரப்பும் எதிர்த்தரப்பு என பார்க்காது அனைவரும் இணைந்து தீர்வு காணவேண்டும். அவ்வாறு இல்லையேல் நாம் நாடாளுமன்றத்தில் இருப்பது பொருத்தமல்ல.

நான் என்னுடைய பதவி விலகியதுடன் மலையக அமைச்சர்களுக்கு முதுகெலும்புள்ளது என்பதை நிரூபித்துள்ளோம். எது சரி, எது தவறு என்பது எங்களுக்கும் தெரியும். தவறு நடந்தால் அதனை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

அபிவிருத்தி அரசியலை முன்னெடுக்க முடியாது. கொள்கை அரசியலுக்கு மாற வேண்டும். தங்களுடைய ஆதங்கத்தை காட்டும் மக்கள் போராட்டத்திற்கும் ஆயுதம் ஏந்தாது, வன்முறையில் ஈடுபடாத போராட்டத்திற்கு நாங்கள் முழு ஆதரவையும் வழங்குவோம். மக்கள் பக்கம் நிற்பதாலேயே பதவி விலக தீர்மானித்தோம். தங்களது எதிர்ப்பை காட்டுவதற்காக தலவாக்கலைக்கு வந்த மலையக மக்களை வைத்து, சஜித் பிரேமதாச தேர்தல் பிரசாரம் செய்கிறார்.



ஜீவன் தொண்டமான் எம்.பி.

## நாங்கள் நாளையே ஆட்சியை பொறுப்பேற்கத் தயார்

அடிமட்டத்தில் இறங்கி மக்களின் பிரச்சினைகளை ஆராயவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குள்ளது. நாங்கள் ஆதரவு வழங்குவதாகக் கூறினாலும் அரசாங்கத்திற்கும் நம்பிக்கையில்லை. நம்பிக்கையில்லையேல் நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியை தீர்க்க முடியாது.

நிதி அமைச்சராக இருக்க பொருளாதாரம் தொடர்பாக தகுதி தேவையில்லை என அலி சப்ரி எம்.பி தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொள்கின்றோம். எனினும், ஜனாதிபதி மற்றும் பிரமதருக்கும் நிதி மற்றும் பொருளாதாரம் தொடர்பான அறிவு இல்லையென்றால் நிதி மற்றும் பொருளாதாரம் தொடர்பான அறிவில்லாத ஒருவரை நிதி அமைச்சராக நியமிப்பார்களா? அல்லது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை அமைச்சர்களாக நியமிப்பார்களா? எனவே, அரசாங்கத்திற்கு நம்பிக்கை தொடர்பான பாரிய பிரச்சினையுள்ளது.

எனவே, அமைச்சரவையில் ஒரே குடும்பத்தில் இருவருக்கு மேலாக இருக்க முடியாது என்ற யோசனையை முன்வைக்கின்றோம். அதனை கொண்டுவந்தால் நாங்கள் ஆதரவளிப்போம்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பாக நாங்கள் எதிர்ப்பில்லை. அது தொடர்பாக பேசுவதற்கு நாங்கள் தயார். ஆனால், நம்பிக்கை தொடர்பான பிரச்சினை முதலில் தீர்க்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கான யோசனையை நிறைவேற்ற இணக்கம் தெரிவித்தால், நாளையே ஆட்சியை பொறுப்பேற்கத் தயார். பொருளாதாரத்தை மீட்பதற்கும் தயாராக இருக்கின்றோம். வரிசை யுகத்தை இல்லாதொழிப்பதற்கு எங்களிடம் திட்டங்கள் இருக்கின்றன.



எரான் விக்கிரமநாயக்க எம்.பி.

## பொருத்தமற்ற வகையில் செயற்படுவது கவலைக்குரியது

நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதற்கான சாதகமான கருத்துகள் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்படாதமை கவலைக்குரிய விடயமாகும்.

சபை அமர்வுகள் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படுவதற்கு பாதிப்பு ஏற்படுத்தியமையினால் சபை நடவடிக்கைகள் இரு முறை ஒத்திவைக்கப்பட்டன. இவ்வாறான நெருக்கடி நிலைமைகளின்போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கக்கூடாது என்பதே என்னுடைய நிலைப்பாடாகும்.

ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படாதபோதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் முன்வைத்த கருத்துகள் மிக முக்கியமானதாகும். இதனை சபை அவதானம் செலுத்த வேண்டும் என்பதை நினைவுப்படுத்த வேண்டும். அதன்படி, கட்சி பேதமின்றி, அரசியல் தேவைகளுக்கு உட்படாது நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொது வேலைத்திட்டம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டது கவலைக்குரிய விடயமாகும். எனவே, விவாதத்தில் தேவையற்ற விடயங்களை முன்வைக்காது, நெருக்கடிகளைத் தீர்க்கும் வகையிலான விடயங்களை முன்வைக்குமாறு அனைத்து உறுப்பினர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

## நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவாருங்கள்

அரசியலமைப்புக்கமைய ஜனாதிபதிக்கு இன்னும் 3 வருடங்கள் உள்ளன. அவர் பதவி விலக வேண்டியதில்லை. ஜனாதிபதியும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார்.

நாட்டின் பிரச்சினைகள் எங்களுக்கும் புரியும். அதற்கு தீர்வை வழங்கவேண்டும். எனினும், நெருக்கடிகளுக்குத் தீர்வை வழங்காது, ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவி நீக்குவதற்கே எதிர்க்கட்சிகள் தலைமைத்துவம் வழங்குகின்றன.

இடைக்கால அரசாங்கம் அமைக்க எதிர்க்கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை இல்லை. ஜனாதிபதி எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தாலும் அதனை நிராகரித்துள்ளன. சிலர் விரும்பினாலும் கட்சிகள் இடங்கொடுக்கவில்லை. நெருக்கடி இருக்கும் வரையே அரசியல் செய்ய முடியும்.

எதிர்க்கட்சிகளிடம் பெரும்பான்மை இருந்தால் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவாருங்கள். ஆனால், ஜனாதிபதி ஒருபோதும் பதவி விலக மாட்டார். அதற்கு நாங்கள் இடமளிக்கவும் மாட்டோம்.



காஞ்சன விஜேசேக்கர

# தூய சக்தி ஆய்வு நடவடிக்கைகளுக்காக யாழ்.- நோர்வே பல்கலைக்கழகங்கள் முக்கூட்டு உடன்படிக்கை கைச்சாத்து













(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், மேற்கு நோர்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் நோர்வேயின் பேர்கன் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையில் உயர்பட்ட ஆய்வு நடவடிக்கைகளுக்கான முக்கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் (06) புதன்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

HRNCET 2.0 என்று பெயரிடப்பட்டுள்ள புதிய நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கூட்டு உடன்படிக்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், மேற்கு நோர்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் அதன் துணைப் பீடாதிபதி க்றோ அனிற்றா பெணஸ் ப்ளற்றன் மற்றும் பேர்கன் பல்கலைக்கழகத்தின் சார்பில் அதன் துணை முதல்வர் ஒய்விண்ட் ப்றட்டே ஆகியோரும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரீனே ஜோரன்லி எஸ்கெடாலும் நிகழ்நிலையில் கலந்துகொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் செயற்றிட்ட இணைப்பாளர் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜனும், மேற்கு நோர்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் செயற்றிட்ட இணைப்பாளர் தயாளன் வேலாயுதபிள்ளை ஆகியோரும் இதன்போது உடனிருந்தனர்.

இந்த நிகழ்வின்போது நோர்வேயிலிருந்து வருகை தந்த இரு பல்கலைக்கழகங்களினதும் விரிவுரையாளர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் அதிகாரிகள் மற்றும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆய்வு மாணவர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இவ்வுடன்படிக்கையின் மூலம் தூயசக்தி தொழில்நுட்பங்களில் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழகங்களுக்கிடையில் இணைந்த முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் திட்டங்களில் கவனம் செலுத்தப்படவுள்ளது.





















பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் க.திருலோக சங்கர் தலைமையில் அமரர் பேராசிரியர் சோ. சந்திரசேகரனுக்கான மலர் அஞ்சலியும், நினைவஞ்சலியும் நேற்று இடம் பெற்றன.

## சப்ரகமுவ தமிழ் மொழிப் பாடசாலைகளில் சமய பாடங்கள் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் சிறுபான்மையின மாணவர்களுக்கு சமய பாடங்களை போதிக்க ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி கற்கும் முஸ்லிம், கிறிஸ்தவ, கத் தோலிக்க மாணவர்கள் முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்கும் இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க மாணவர்கள் இந்நிலைமையால் பெரிதும் பாதிக்கப்படுவதாக இம்மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாற்று இனங்களை சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றபோதிலும் மாணவர்களின் சமய பாடங்களை கற்கும் உரிமை தொடர்பில் பாடசாலை நிர்வாகங்கள் அக்கறை செலுத்த வேண்டுமென பாதிக்கப்படும் மாணவர்களின் பெற்றோர் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. குறிப்பாக இந்நிலைமையால் இம்மாணவர்கள் இப்பாடசாலைகளில் இருந்து க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை எழுதும் மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## யாழில் சிறுவர் யாசகம் பெறுதலை கட்டுப்படுத்த விசேட கலந்துரையாடல்





(யாழ். செய்தியாளர்)

சிறுவர் யாசகம் பெறுதல் மற்றும் சிறுவர் வியாபாரத்தை கட்டுப்படுத்தும் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் சிறுவர்களைப் பயன்படுத்தி யாசகம் பெறுதல் மற்றும் சிறுவர் வியாபாரத்தை கட்டுப்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதோடு, பதிவில்லாத விடுதிகளை கண்காணித்து சட்ட நடவடிக்கையெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பாடசாலை மாணவர்களின் ஒழுக்கநெறிகள் மற்றும் இருபத்தொரு வயதிற்கு குறைந்தவர்களிற்கு சிகரெட் விற்றல், மருந்துச் சிட்டையில்லாது மருந்து வழங்குதல் மற்றும் பொது இடங்களில் நிகழும் சமூகசீர்கேடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), உதவி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், மாநகர சபை ஆணையாளர், சட்ட வைத்தியர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வலயக் கல்வி பிரதிநிதி, மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

# Technnovation Awards 2022 விழாவில் தங்க விருதினை வென்றது மக்கள் வங்கி

அண்மையில் கொழும்பு Shangri-La வில் நடைபெற்ற இலங்கையின் முன்னோடி மற்றும் ஒரே கொடுப்பனவு தொழில்நுட்ப கண்டுபிடிப்பு விருதுகளான LankaPay Technnovation விருதுகளின் நான்காவது பதிப்பில் இரண்டு விருதுகளை வென்றதன் மூலம், இலங்கையின் டிஜிட்டல் வங்கித்துறையில் அதன் மேலாதிக்கத்தை மக்கள் வங்கி மேலும் விளக்கியுள்ளது.

மக்கள் வங்கியின் மொபைல் வங்கிச் சேவை அப் ஆன People's Pay, LankaQR (வங்கிகள் மற்றும் வங்கியற்ற நிதிநிறுவனங்கள்) ஊடாக செய்யப்படும் சில்லறை கொடுப்பனவுகளுக்கான சிறந்த மொபைல் அப்ளிகேஷனுக்கான தங்க விருதினை வென்றது. அதேவேளை, மிகவும் புகழ் பெற்ற டிஜிட்டல் பேமண்ட் தயாரிப்புக்கான (வங்கிகள் மற்றும் வங்கியற்ற நிதிநிறுவனங்கள் - இணைய வங்கி) மெரிட் விருதினை People's Wave வென்றது.

LankaPay (National Payment Card) தேசிய கொடுப்பனவு அட்டைக்கு பெற்றுள்ள அசைக்க முடியாத ஆதரவிற்காக மக்கள் வங்கிக்கு விசேட பாராட்டும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு மற்றும் சிரேஷ்ட டிஜிட்டல் அதிகாரி மங்கள காரியவசம் ஆகியோர் மக்கள் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டனர்.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ இந்நிகழ்வு தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

"கொவிட் 19 பெருந்தொற்றுக்கு முன்னரே மக்கள் வங்கியானது வங்கித்துறையில் டிஜிட்டல் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக இலங்கையில் அளவுகோளை ஏற்படுத்தியுள்ளது. பெருந்தொற்று ஏற்கனவே பல்வேறு விதமான சவால்களை ஏற்படுத்தியுள்ளன. அந்த வகையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம் அதிலிருந்து மீண்டு வருவதற்கான வழியை உருவாக்கிட இது உதவுகிறது. இந்த அங்கீகாரங்கள் அவற்றை தெளிவாக புலப்படுத்துவதால் இந்த விடயத்தில் வங்கி ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது என்பதுடன் தேசத்துக்கும் மக்களுக்கும் சிறந்ததை செய்வதில் நாம் எப்போதும் கவனம் செலுத்துவோம்.

விருது வென்றதனைப் பற்றி கருத்து தெரிவித்த மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு,

"டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாடு என்பவற்றில் ஒரு முன்னோடி பங்கினை




வகிப்பதன் மூலம் இலங்கையின் வங்கியியல் துறையில் புரட்சிகரமான பயணத்தை 2015ஆம் ஆண்டு ஆரம்பித்தோம். அன்று முதல் மக்கள் வங்கியானது பல வகைப்பட்ட, உலகத்தரம் வாய்ந்த டிஜிட்டல் வங்கித் தீர்வுகளை தொடர்ச்சியாக வழங்கி வருகிறது. அவை வளர்ந்து வரும் எமது நகர்ப்புற மற்றும் கிராமப்புற வாடிக்கையாளர்களால் மிகவும் வேகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், அவை மேம்பட்ட வசதி, வேகம், வினைத்திறன் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை வழங்கின. இந்த அங்கீகாரமானது நாட்டின் டிஜிட்டல் வங்கியியலில் முன்னோடி என்ற எமது ஸ்தானத்தினை மேலும் வலுப்படுத்துகின்றது. இவ்விருதினை வென்றதில் நாம் பெருமையடைகின்றோம். நாம் இத்தோடு நின்றுவிடாது தொடர்ந்தும் டிஜிட்டல் தீர்வுகளை மேம்படுத்துவதுடன் சர்வதேச தரத்திலான மற்றும் டிஜிட்டல் சமூகத்திற்கான தேசத்தின் பரிணாம வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் நாம் தொடர்ந்தும் முயற்சிப்போம்.

நாட்டில் பணமற்ற பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியின் முயற்சிக்கு ஆதரவளித்திடும் நோக்கத்துடன் People's Pay மொபைல் கொடுப்பனவு அப் உருவாக்கப்பட்டது. மக்கள் வங்கியின் வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தளத்தை குறிப்பாக இளம் வயதினருக்கு அவர்களது பயனர் அனுபவத்தினை மேம்படுத்தும் வகையில் வாழ்க்கைமுறை அம்சங்களை வழங்கிடும் உலகத்தரம் வாய்ந்த மொபைல் வங்கியியல் தீர்வை அனுபவிக்கும் வாய்ப்பினை வழங்குவதற்காகவும் இது சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அப் ஆனது தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் கிடைக்கப்பெறுகின்றது. இது பெரும்பாலும் கிராமப்புற வாடிக்கையாளர்களை அடைய உதவிடும் வகையில் சிங்களம் மற்றும் தமிழ்மொழிக்கு முன்னுரிமை அளிக்கின்றது.

People's Pay ஆனது LankaQR க்கான சுய பதிவைச் செயற்படுத்துகிறது. இது சிறு வணிகங்களை டிஜிட்டல் சேனல்களுக்கு மாறுவதற்கு ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எந்தவொரு வணிகருக்கும் குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு(SMEs) வேகமான, பாதுகாப்பான மற்றும் குறைந்த கட்டண டிஜிட்டல் கொடுப்பனவுகளை இந்த அப் எளிதாக்குகிறது.

People's Wave என்பது 2018ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 1மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்களைக் கொண்ட ஒரு புரட்சிகரமான மற்றும் இலங்கையில் அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நிதியியல் அப் ஆகும். வங்கியின் மைய அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த அப் ஆனது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு வங்கி பரிவர்த்தனைகளை வசதியாக மேற்கொள்ள அனுமதிக்கிறது. அவர்கள் தங்களது வீடுகள் மற்றும் அலுவலகங்களிலிருந்து எந்தவொரு கிளைக்கும் செல்லாமல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது. மேலும் இந்த அப் பல பயன்மிகு அம்சங்களைத் தம்மகத்தே கொண்டுள்ளது. பல்வேறு கணக்குகளின் இருப்புமீதி விசாரணை, கடன்கள் மற்றும் கடனட்டைகள், கொடுப்பனவுகள், பில் கட்டணங்கள், முந்தைய பரிவர்த்தனைகள், தமது அல்லது மூன்றாம் தரப்பு மக்கள் வங்கி மற்றும் ஏனைய வங்கிகளுக்கான நிதி பரிமாற்றங்கள், எதிர்கால நிதி பரிமாற்றத்துக்கான நிலையாணை திகதி குறிப்புகள் போன்றவை உள்ளடங்குகின்றன. மேல் மாகாணத்திற்கு வெளியே 70% க்கும் மேற்பட்ட செயற்பாட்டிலுள்ள People's Wave பாவனையாளர்களுடன் வங்கியானது தமது நோக்கமான நிதியியல் உள்ளடக்கத்தின் இயக்கத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செய்துள்ளது.

LankaPay Technnovation விருதுகள் நாட்டின் தேசிய கட்டண வலையமைப்பின் செயற்பாட்டாளரான LankaClear இனரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதில் கருவியாக இருக்கும் நாட்டின் சிறந்த கட்டண கண்டுபிடிப்புகளை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்துகின்றது. டிஜிட்டல் சுப்பர் ஹீரோக்களை கௌரவித்தல் ('Honouring the Digital Superheroes') என்ற தொனிப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட இந்த LankaPay Technnovation விருதுகள் 2022, தேசிய பொருளாதாரத்துக்கு ஆதரவளிப்பதற்கும் பல சவால்களுக்கு முகம்கொடுத்து கொடுப்பனவு தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை வங்கிகள் வழங்குவதற்கும், NBFIs மற்றும் FinTech நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அங்கீகரிப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

சீட்டிலுக்கப்பட்ட திகதி 06.04.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4727
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,804,810.00
அச்சிடப்பட்ட திகதி 04.04.2022
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 5 3 5 1 3 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,880,230.00

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /04 /06
சீட்டிழுப்பு இலக்கம் : 759
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,049,160.00
வெற்றி இலக்கினம் S வெற்றி இலக்கங்கள் 08 43 56 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,603,212.80

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 06.04.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1233
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,970,400.00
வெற்றி இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 9 9 1 1 5 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,904,763.20

[illegible] 23 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1076
டிக்கட் அச்சிடப்பட்ட திகதி : 2022.04.05
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,545,060.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 246,398,434.00
[illegible] Q [illegible] 21 [illegible] 01 06 32 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : infor@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கிழக்கு மாகாண கல்வித் தரத்தை 3 வருடங்களில் அபிவிருத்திசெய்யும் செயற்றிட்டமொன்று தயாரிப்பு






(திருகோணமலை நிருபர்)

கிழக்கு மாகாணத்தின் கல்வித் தரத்தை 03 ஆண்டுகளில் அபிவிருத்திசெய்யும் செயற்றிட்டம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.திசாநாயக்கவின் எண்ணத்திலும் கிழக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்களின் ஆலோசனையுடனும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வலயங்களின் அதிபர்களுக்கு அறிவூட்டும் கல்வி மாநாடு திருகோணமலை வலயக் கல்வி அலுவலகம் சார்பாக பணிப்பாளர் எஸ்.சிறிதரன் தலைமையில நேற்று (07) குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ திசாநாயக்க கலந்துகொண்டிருந்தார்.

இவ்வாறான மூன்றாண்டு திட்டத்தை அதிபர்கள் மத்தியிலே அறிவூட்டும் முதலாவது மாநாடு திருகோணமலை கல்வி வலயத்திலேயே இடம்பெற்றது. இம்மாநாட்டில் திருகோணமலை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர், பொறியியலாளர், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாட இணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

தேசிய ரீதியாக நடைபெறுகின்ற பரீட்சைகளில் எமது மாகாணம் எவ்வாறு முன்னேற்றமடைய வேண்டும், கடந்த காலங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கான காரணம் முதலானவற்றை ஆராய்ந்து சீர்செய்வது தொடர்பான முன்னெடுப்புகளும் இதன்போது ஆராயப்பட்டது.

இக்கல்வி மாநாட்டில் 82 பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். புதிதாக பதவியேற்றுள்ள செயலாளருக்கான வரவேற்பும் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



இப்போது கோட்டாவுக்கும் அவரிட ஆட்சிக்கும் ஏற்பட்ட இந்த எதிர்ப்பு ஈஷ்டர் குண்டு தாக்குதல் சாபம் எண்டு குமார வெல்கம எம்பியும், ஜனாசாவை எரிச்ச சாபம் எண்டு ஹக்கீம் எம்பியும், முள்ளிவாய்க்காலில் குண்டுபோட்டு தமிழ்மக்கள இனப்படுகொலை செய்த சாபம் எண்டு சிறிதரன் எம்பியும் ராஜபக்ஷ குடும்பத்தின் சாபக்கேடுகள சோக்கா சொல்லி இருக்காங்க எலுவா அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் எண்டு எங்கட பாட்டன்ட பாட்டன் சொல்லித்தந்த பழமொழி இப்பதான் இந்த குடும்ப ஆட்சில நல்லா விளங்கி இருக்கும் .. மறுகா நான் சொன்னது சரி எலுவா!

கிழக்கு
செய்திகள்
easttamilan@gmail.com

# கல்முனை பஸ் நிலையம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு



(சாய்ந்தமருது நிருபர்)

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் புனரமைப்பு செய்யப்பட்டு, அழகுபடுத்தப் பட்டுள்ள கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலைய வளாகம் மக்கள் பாவனைக்காக கல்முனை மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆவணங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பி.எஸ்.ஜெயதிஸ்ஸ, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபிடம் நேற்று (07) கையளித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, வேலைகள் அத்தியட்சகர் எம்.உதயகுமரன், உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.நௌஷாத், நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் ஜீ.கே.சி.கருணாரத்ன, நகர திட்டமிடல் உத்தியோகத்தர்களான எம்.எம்.முஸ்தாக், வி.துஷித்ரா உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்பிலுள்ள நகர அபிவிருத்தி அமைச்சினால் தேசிய ரீதியில் 100 நகரங்களை செழுமைமிகு நகரங்களாக அபிவிருத்திசெய்யும் திட்டத்தின்கீழ், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் வேண்டுகோளின் பேரில் கல்முனை நகரமும் உள்வாங்கப்பட்டு, முதற்கட்டப் பணியாக பஸ் நிலைய வளாகத்தை புனரமைப்பு செய்து, அழகுபடுத்துவதற்கு சுமார் 18.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து கடந்த செப்டெம்பர் 10ஆம் திகதியன்று இவ்வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலமாக பள்ளம் படுகுழிகளுடன் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட கல்முனை பஸ் நிலைய வளாக புனரமைப்பு வேலைத்திட்டத்தை குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர், நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகளுக்கு மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் இதன்போது நன்றியும் பாராட்டும் தெரிவித்துக்கொண்டார்.

# தென்கிழக்குப் பல்கலையில் இரத்ததான முகாம்




(ஒலுவில், அட்டாளைச்சேனை மத்திய நிருபர்கள்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கில், தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்ததான முகாம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீட ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபாவின் வேண்டுகோளுக்கிணங்க கொவிட் கால நிலைமை மற்றும் இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முகாமில் வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், ஒத்துழைப்பு நல்கியதுடன், இதில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் பெரும்பாலானோர் ஆர்வத்தோடு கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதில் 106 இரத்த மாதிரிகள் சேகரிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் சட்டத்தரணிகள் சங்கத்தினரால் நீதிமன்றுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்






(கிண்ணியா நிருபர்)

நாட்டின் பொருளாதார நிலையினை கருத்திற்கொண்டு நாடுபூராகவும் இடம்பெற்றுவரும் போராட்டத்தின் ஒரு பகுதியாக நேற்று (07) கந்தளாய் சட்டத்தரணிகள் சங்கத்தினரால் நீதிமன்றத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இனவாதத்தால் நாட்டை நாசமாக்கியது போதும், எமது சிறார்களுக்காய் இலங்கையை பாதுகாப்போம், லோன் லீசிங் செலுத்த முடியாது நிவாரணம் வழங்கு, 74 வருட அரசியல் சாபத்தை முடிவுக்கு கொண்டுவருவோம் போன்ற வாசகங்களை ஏந்தியும் கோ ஹோம் கோட்டா போன்ற வாசகத்தை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

பின்னர் பிரதான வீதிவரை கோஷங்களை எழுப்பி நடைபவனியாக தங்களது ஆதங்கங்களை அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். இதில் பொதுமக்களும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இப்தார் நிகழ்வு





(மாளிகைக்காடு நிருபர்)

"சகோதரத்துவம் மற்றும் இன நல்லிணக்கத்தை மேம்படுத்துதல்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடுசெய்த இப்தார் (நோன்பு திறக்கும்) நிகழ்வு நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

முஸ்லிம் மஜ்லிஸ் சிரேஷ்ட பொருளாளரும் விரிவுரையாளருமான ஏ.எல்.எஸ்.சாபித் தலைமையில், வந்தாறுமூலையில் அமைந்துள்ள பிரதான வளாக நல்லையா ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர். வ.கனகசிங்கம் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி.ஜே.கெண்னடி கௌரவ அதிதியாகவும், பதிவாளர் ஏ.பகிரதன் மற்றும் நிதியாளர் எம்.எம்.எம்.பாரிஸ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

அஷ்ஷெய்ஹ். ஏ.எம்.அக்றம் (நழீமி) சிறப்புரையாற்றிய இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் அத்துடன் மாணவர்களும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 4 மில்லியன் ரூபா நிதியில் சேதனப் பசளை உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கிவைப்பு




(கந்தளாய் நிருபர்)

நிலைபேறான சேதன விவசாய கலாசார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேதனப் பசளை உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (06) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது பயனாளிகளுக்கு சேதனப் பசளை உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதற்காக 4 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இரண்டு கட்டங்களாக இவ்வுபகரணங்கள் மாவட்டத்திலுள்ள விவசாய சங்கங்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்ினதும் மொத்தப் பெறுமதி பதினொரு மில்லியன்களாகும். மொத்தமாக 27 பயனாளிகளுக்கு இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு கட்டங்களில் வழங்கப்பட்ட உபகரணங்கள் மூலம் இதுவரை 2500 மெட்ரிக் தொன் சேதனப் பசளை உற்பத்திசெய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களை பேணி இச்சேதனப் பசளை உற்பத்திசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சேதன விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் இவ்வுபகரணங்கள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கே.குகதாசன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயதாஸன், உதவி பணிப்பாளர் (உரம்) எச்.ஜி.எஸ்.பிரேமரத்ன உட்பட இன்னும் பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் விவசாயிகளுக்கு ஆளுநரால் 40 ஏக்கருக்குரிய விதை நெல் வழங்கிவைப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனையின் பேரில் விவசாயிகளுக்கு அரைமானியத் திட்டத்தின்கீழ் சிறுபோக வேளாண்மைச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பாரம்பரிய இனத்தைச் சேர்ந்த விதைநெல் வழங்கும் நிகழ்வுவொன்று நேற்று (07) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலையடிவட்டை விவசாயப் போதனாசிரியர் பிரிவின் கீழுள்ள 40 ஏக்கருக்குரிய விதைநெல் இதன்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

அப்பகுதி விவசாயப் போதனாசிரியர் ரி.கோபி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பார் வி.பேரின்பராசா, உதவி விவசாயப் பணிப்பாளர் த.மேகராசா உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டு விவசாயிகளுக்கு விதைநெல்லை பகிர்ந்தளித்தனர்.

# களுவாஞ்சிக்குடியில் 7,50,000 ரூபா நிதியில் குழாய் குடிநீர் இணைப்பு வழங்கிவைப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்குட்பட்ட களுவாஞ்சிக்குடி வட்டாரத்தில் இதுவரையில் குடிநீர் இணைப்பு வசதிகள் இல்லாமல் இருந்துவந்த மக்களுக்கு அந்த வட்டாரத்தின் பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜின் முயற்சியினால் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் நேற்று (07) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அப்பகுயிலுள்ள மக்கள் மேற்படி பிரதேச சபை உறுப்பினரிடம் விடுத்த வேண்டுகோளிற்கிணங்க குறித்த பிரதேச சபை உறுப்பினர் மேற்கொண்ட முயற்சியின் பலனாக கிழக்கு மாகாண சபையின் 7,50,000 ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் அப்பகுதியில் இதுவரையில் குடிநீர் இணைப்புகளின்றி மிகவும் இன்னல்களை அனுபவித்துவந்த 126 குடும்பங்களுக்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குழாய் மூலமான குடிநீர் வழங்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றது. இதன்போது அந்த வட்டார பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ், அப்பகுதி கிராம சேவை உத்தியோகத்தர், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு செயற்றிட்டத்தை ஆரம்பித்துவைத்தனர்.

தாம் இதுவரைகாலமும் சுத்தமான குடிநீரின்றி பெரும் அல்லலுற்று வந்ததாகவும். தமது நீண்டநாள் கோரிகை தற்போது நிறைவேறுவதையிட்டு சந்தோஷமடைவதாகவும். தமது கோரிக்கையை ஏற்று குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தந்த மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் களுவாஞ்சிக்குடி வட்டார உறுப்பினர் மே.வினோராஜிக்கு தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

# மருதமுனை பிரதேச வைத்தியசாலை ஊழியர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் (06) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சுகாதாரத்துறை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் பல்வேறு தடைகளை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டுள்ளதுடன், சில மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் உடனடியாக இதனை சீர்செய்ய வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் சுகாதாரத்துறை மிக மோசமாக பாதிக்கப்படுவதை தவிர்க்க முடியாததாக மாறிவிடும் என வைத்தியசாலை பணியாளர்கள் சுலோகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனவே, சுகாதாரத்துறையை பாதிப்படையச் செய்யாமல் பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளை சீராக வழங்குவதற்குத் தேவையான மருந்து வகைகள் மற்றும் ஏனைய வசதிகளை தங்குதடையின்றி அரசாங்கம் வழங்கவேண்டும் என வைத்தியர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் தாதியர்கள் உயிரியல் பொறியியலாளர்கள் 27 பேருக்கு நியமனக் கடிதம்





(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாண சபைக்கு சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட உயிரியல் பொறியியலாளர்கள் மற்றும் தாதியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நேற்று முன்தினம் (06) திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

25 தாதியர்கள் மற்றும் இரண்டு உயிரியல் பொறியியலாளர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் ஆளுநர் பேசுகையில், நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் சேவை செய்ய அனைவரும் உறுதியுடன் இருக்கவேண்டும். இலவசக் கல்வியினால் வழங்கப்படும் இந்த நியமனத்தை ஒரு வேலையாக மட்டும் கருதக்கூடாது - என்றார்.

உலகின் பல நாடுகளில் இலவசக் கல்வி வழங்கப்படுவதில்லை என்றும் மக்கள் செலவில் நியமிக்கப்பட்டுள்ள நீங்கள், உங்களிடம் வரும் நோயாளிகளை தாய், தந்தையாக நடத்த வேண்டும் என்றும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தாதியர்கள் முன்னிலையில் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதன்போது மாகாண பிரதம செயலாளர் துசித பீ.வணிகசிங்க கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. முரளிதரன், மாகாண கல்விச் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம்.கோபாலரட்ணம், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஊழியர்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!







(கல்முனை, நாவிதன்வெளி நிருபர்கள்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஊழியர்கள் நேற்று முன்தினம் (06) மதியம் வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சுகாதார சேவையில் நிலவும் குறைபாடுகள், மருத்துவப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு வழங்குவதற்குரிய போதிய மருந்துகள் இன்மை, மின்வெட்டு மற்றும் எரிபொருள் உள்ளிட்ட சுகாதார சேவையில் காணப்படும் குறைபாடுகள் உடனடியாக நீக்கப்பட வேண்டியும் பொதுமக்களுக்கான சுகாதார சேவைகள் தங்குதடையின்றி இடம்பெற உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் கோரி வைத்தியசாலையின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார சேவைக்கான நிதி ஒதுக்கீட்டை குறைக்காதே, களவை நிறுத்து, மருந்தை வழங்கு, அரசின் மோசமான நிதி நிர்வாகம்; அத்தியாவசிய மருந்துகள் இல்லை; மனித உயிர்கள் ஆபத்தில்!, மருந்துகள் இல்லை, சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, வேண்டாம் வேண்டாம் ஊழல் அரசு, அரசே மக்கள் பணத்தை வீணடிக்காதே ஆகிய வசனங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை வெளிப்படுத்தி தமது எதிர்ப்பினை வெளியிட்டு ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

# கல்முனை வலயக் கல்வி அலுவலக இப்தார் நிகழ்வு





(நாவிதன்வெளி நிருபர்)



கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் (06) வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் கல்வி வலயத்தின் புதிய கட்டடத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மௌலவி எம்.எச். ரியாலினால் (ஹாஸிபி) விசேட மார்க்க சொற்பொழிவு இடம்பெற்றதுடன், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் தாஹீர் அஷ்ரப், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஸீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.ரிபாஸ், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.ரஸ்மி, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.ரயீஸ், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், தற்போதைய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள், நிறுவனத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வு வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளர் வை.ஹபிபுல்லா தலைமையிலான குழுவினரின் நெறிப்படுத்தலிலும் ஒழுங்கு படுத்தலிலும் சிறப்பாக நடைபெற்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

# சேதனப்பசளை உற்பத்தி, பீடைநாசினி தயாரிப்பு பாவனை தொடர்பில் மட்டக்களப்பில் செயலமர்வு





(மட்டக்களப்பு நிருபர்)



இயற்கை முறை விவசாயத்திற்கான சேதனப்பசளை உற்பத்தி, இயற்கை பீடைநாசினிகள் தயாரிப்பு மற்றும் பாவனை தொடர்பான செயல்முறை பயிற்சி மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் விவசாய போதனாசிரியர் பிரிவில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை பசளையினை நடைமுறைப்படுத்தும் வகையில் விவசாய விரிவாக்கல் பிரிவினால் சேதனப் பசளை விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்தி, இயற்கை பீடைநாசினிகள் தயாரிப்பு மற்றும் பாவனை தொடர்பான பயிற்சி செயலமர்வுகள் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான் விவசாய போதனாசிரியர் பிரிவில் போதனாசிரியர் தெய்வமனோகரி ரமேசன் தலைமையில் இயற்கை முறையிலான விவசாய சேதனப் பசளை உற்பத்தி மற்றும் இயற்கை பீடைநாசினிகள் தயாரிப்பு மற்றும் பாவனை தொடர்பான செய்முறை பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.

சத்துருக்கொண்டான் கும்பிளாமடு பகுதியிலுள்ள விவசாயத் தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட சேதனப் பசளை உற்பத்தி மற்றும் இயற்கை பீடை நாசினிகள் தயாரிப்பு மற்றும் பாவனை தொடர் பான நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, வலயம் மத்தி உதவி விவசாயப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறிதரன், பாடவிதான உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவ பயிலுனர்கள், சத்துருக்கொண்டான் கும்பிளாமடு விவசாய போதனாசிரியர் பிரிவில் தெரிவு செய்யப்பட பயனாளிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது கூட்டெரு தயாரித்தல், இயற்கை முறை பூச்சி விரட்டிகள் தயாரிப்பு, திரைப்பசளை தயாரித்தல், பழமரங்களை கத்தரித்து சேதனப் பசளை இடல், கருகிய உமிபாவனை, கிளசரியா நடுகைமுறை போன்ற செய்முறை விளக்க பயிற்சிகள் இதன்போது போதனாசிரியர்களினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலய மாணவி ஆயிஷா 181 புள்ளிகள் பெற்று சித்தி



(மீராவோடை நிருபர்)

வெளியான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் படி பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலய மாணவி எம்.ஏ.சீ.ஆயிஷா நதா 181 புள்ளிகளைப் பெற்று வாழைச்சேனை பிரதேச பாடசாலைகளில் முதலிடம் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் எல்.ரீ.எம்.சாதிக்கீன் தெரிவித்தார்.

குறித்த பரீட்சையில் சித்தியடைந்து பிரதேசத்துக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்துத் தந்துள்ள மாணவிக்கும் கற்பித்த ஆசிரியை எம்.எம்.சனூபா மற்றும் ஒத்துழைப்புகளை வழங்கிய அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக அதிபர் எல்.ரீ.எம்.சாதிக்கீன் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

# சாய்ந்தமருது, கல்முனையில் இரண்டாவது நாளாகவும் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் முன்னெடுப்பு!





(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்து மக்களின் வாழ்வாதாரம், அன்றாட ஜீவனோபாயம் கஷ்டத்திற்குள்ளான நிலையில் தற்போதிருக்கும் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது, கல்முனை பிரதேசங்களில் இரண்டாவது நாளாக புதன்கிழமை இரவும் தேசிய கொடியை கையில் ஏந்திக்கொண்டு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பிரதான வீதிகளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும்பாலான இளைஞர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு GO HOME GOTA, வீட்டுக்கும் கேடு நாட்டுக்கும் கேடு, கோட்டா நீ அமெரிக்காவுக்கே ஓடு, பச்சிளம் குழந்தைகளை கொன்ற கோட்டாவே வெளியேறு, மொட்டின் முட்டுக்கள் கலருங்கள், அடுத்து நாட்டை விட்டு வெளியேற போவது யார், ஆட்சி செய்து கிழித்தது போதும், குடும்ப ஆட்சி வேரோடு ஒழிக, பெற்றோல் இல்லை டீசல் இல்லை. கோட்டாவுக்கு அறிவும் இல்லை, கோட்டா சேர் தயவுசெய்து போங்க சேர், வெந்தது நாடு கோட்டாவ தூக்கி வெளியில் போடு, பொருளாதார நெருக்கடி இரவெல்லாம் கொசுக்கடி, பெசிலே வெளியேறு போன்ற கோஷங்களையிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சாய்ந்தமருதில், சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலிலிருந்து ஆரம்பித்து மாளிகா சந்திவரை சென்ற ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றதுடன், கல்முனையில் நாகூர் ஆண்டகை தர்கா சரிபிலிருந்து ஆரம்பித்த போராட்டப் பேரணி கல்முனை பிரதான வீதிகளிலும் இடம்பெற்றது.

இதன் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், அதனை கட்டுப்படுத்தும் வேலைகளை பொலிஸார் துரிதகதியில் மேற்கொண்டிருந்ததுடன், உச்சகட்ட பாதுகாப்பு கடமையிலும் ஈடுபட்டிருந்தமையையும் காணமுடிந்தது.









திருகோணமலை தக்கியா வீதி ஆயீஷா சித்திக்கா முன்பள்ளியின் வருடாந்த சந்தை, அதிபர் பர்சானா நிலாம் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலய பிரதி அதிபர் ஏ.ஜே.முகம்மட் சாலி மற்றும் இளைஞர் சேவை அதிகாரி ஏ.எல்.அலாவுதீன் பாபு உள்ளிட்டோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், சிறுவர்களின் சந்தையையும் படங்களில் காணலாம். (படங்கள்: கந்தளாய் நிருபர்)

# நாட்டின் பல பகுதிகளிலும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்



மன்னார்







கிரிபத்கொடை


நுவரெலியா


மொனராகலை


குருநாகல்


ஹாலி-எல


கண்டி


வவுனியா



மாத்தறை


கம்பளை


லுணுகலை


வவுனியா








தலாவ





அக்குரஸ்ஸ




பசறை




யாழ்ப்பாணம்

**படப்பிடிப்பு:**
பிரதீப் தம்பரகே, த.அசோக்குமார், மனோஜ் பிரபோத, கமல் சுரவீர, லுணுகலை ஸ்ரீ, சி. திவியா, திசார சோமரத்ன, கெலும் குணதிலக்க, விஜித சல்காது, ந. மலர்வேந்தன், ஐ. சிவசாந்தன்

# உலக செய்திகள்



44ஆவது நாளாகவும் தொடரும் ரஷ்ய தாக்குதல்

# உக்ரைனின் எரிபொருள் சேமிப்புத் தளம் அழிப்பு

கார்கீவ் பகுதியிலுள்ள உக்ரைனின் எரிபொருள் சேமிப்புத் தளத்தை ரஷ்யா ஏவுகணைகளால் தாக்கி அழித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், அதே பகுதியில் ஒரு ரயில் நிலையத்திலுள்ள சில இராணுவ உபகரணங்களையும் வெளிநாட்டு ஆயுதங்களையும் ரஷ்யப் படையினர் அழித்துள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைனின் புச்சா நகரில் பொதுமக்கள் துன்புறுத்தி படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக ரஷ்யா மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளும் முடிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேட்டோ கூட்டணியில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யா, உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்தது. ஐ.நா. மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி இன்று 44ஆவது நாளாகவும் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. அத்தாக்குதல்களால் உக்ரைனின் மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் அழிவின் விளிம்பிலுள்ளன.

உக்ரைன் போர் முற்றியுள்ள நிலையில், 43 இலட்சத்துக்கும் அதிகமானோர் அங்கிருந்து வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதுடன், 65 இலட்சத்துகும் அதிகமானோர் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை புச்சா நகரில் அப்பாவி பொதுமக்கள் 410 பேர் துன்புறுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

**மனித உரிமைகள் பேரவையிலிருந்து ரஷ்யாவை நீக்க வாக்கெடுப்பு**

உக்ரைன் மீதான போர் நீடித்துவரும் நிலையில், மனித உரிமைகள் பேரவையிலிருந்து ரஷ்யாவை நீக்குவது தொடர்பாக ஐ.நாவில் நேற்று வாக்கெடுப்பொன்று நடைபெற்றது.

உக்ரைன் நகரான புச்சாவில் ஏராளமான அப்பாவி மக்களை ரஷ்யப் படையினர் கொன்று குவித்த தகவல் வெளியான நிலையில், ரஷ்யாவை மனித உரிமைகள் பேரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று மேற்கத்தேய நாடுகள் கோரி வருகின்றன. 47 உறுப்பினர்களைக்கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து ரஷ்யாவை நீக்குவது தொடர்பாக ஐ.நா. பொதுச் சபையில் நேற்று வாக்கெடுப்பு நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பிலும் இந்தியா நடுநிலை வகித்துள்ளது. ரஷ்யாவுடன் நட்புறவு கொண்டிருக்கும் நிலையில், அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்காமல் தவிர்த்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவை மனித உரிமைகள் பேரவையிலிருந்து நீக்கினால் அமைதிப் பேச்சுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று நியூயோர்க்கிலுள்ள ரஷ்யாவுக்கான தூதர் வசிலி நெபன்சயா தெரிவித்துள்ளார். இதனிடையே, ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நா. கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்குவதாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**புட்டினின் மகள்களைக் குறிவைத்தும் புதிய பொருளாதாரத் தடைகள்**

ரஷ்யா மீது அமெரிக்கா, ஜி 7 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை புதிய தடைகளை அறிவித்துள்ளன.

ரஷ்யாவின் மிகப்பெரிய நிதி நிறுவனமான ஸ்பர் பேங்க், ரஷ்யாவின் மிகப்பெரிய தனியார் வங்கி ஆல்பா பேங்க் ஆகியவற்றின் மீதும் தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் ரஷ்யாவில் புதிய முதலீடுகள் நிறுத்தப்படும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் மகள்கள் மரியா புட்டினா, கேட்டரினா டிக்கோனோவா ஆகியோரை குறிவைத்து புதிய பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. புட்டினின் மகள்களுடன் ரஷ்ய பிரதமர் மிகைல் மிசுஷ்டின், வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவின் மனைவி, குழந்தைகள், முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவ் உள்ளிட்ட பாதுகாப்புச் சபை உறுப்பினர்களும் அமெரிக்காவின் தடை பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

**மெழுகுவர்த்திகள் ஏற்றி அஞ்சலி**

இந்நிலையில், ரஷ்யப் படைகளின் தாக்குதலில் உயிரிழந்த உக்ரைனியர்களின் நினைவாக லிவிவ் நகரில் பொதுமக்கள் கூடி மெழுகுவர்த்திகளை ஏற்றிவைத்து அஞ்சலி செலுத்தினர்.

உக்ரைன் தேசியக் கொடியில் இடம்பெற்றுள்ள மஞ்சள் மற்றும் நீல நிற போத்தல்களுக்குள் மெழுகுவர்த்தியை ஏற்றி அந்நாட்டின் வரைபடத்தின் வடிவில் வைத்து அவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

கீவ்வின் புறநகர்ப் பகுதிகளிலிருந்து ரஷ்யப் படைகள் வெளியேறி கிழக்கு பகுதிகளுக்கு நகரும்வரை அங்குள்ள புச்சா நகரம்தான் கொடூர தாக்குதல்களை எதிர்கொண்டிருக்கிறது.

இதனிடையே, ரஷ்யப் படைகள் வேண்டுமென்றே பொதுமக்களை கொன்றிருப்பதாக லிவிவ் நகர மேயர் குற்றஞ்சாட்டியுள்ளார். அந்த குற்றச்சாட்டை ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சு மறுத்துள்ளது.

**ஜேர்மனி நாடாளுமன்றம் முன் உக்ரைனியர்கள் போராட்டம்**

ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ள உக்ரைனியர்கள் அந்நாட்டு நாடாளுமன்றம் முன் சடலங்கள்போல் நடித்து நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரஷ்யப் படையெடுப்பைத் தொடர்ந்து 3 இலட்சம் உக்ரைனியர்கள் ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ளனர். ரஷ்ய அரசுக்கு நிதி நெருக்கடி ஏற்படுத்த அங்கிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதி செய்வதை உடனடியாக நிறுத்துமாறு ஜேர்மனி அரசுக்கு கோரிக்கை வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வது விரைவில் நிறுத்தப்படும் என்றாலும், அது உடனடியாக சாத்தியப்படக்கூடிய விடயமல்ல என ஜேர்மனி நிதி அமைச்சர் லிண்ட்னெர் தெரிவித்துள்ளார்.

**உலக நாடுகளில் பாதிப்பு**

உக்ரைன் மீது ரஷ்யாவின் தாக்குதலின் எதிரொலியாக பல நாடுகளில் வேளாண்துறை ஏற்றுமதி, தொழில்துறை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் தென்பகுதியில் அசோவ் கடலையொட்டிய மரியுபோல் நகரில் ரஷ்ய இராணுவத்தின் முற்றுகை ஒரு மாதத்துக்கு மேல் நீடிக்கிறது. மின்சாரம், குடிநீர், உணவுப் பொருள் வழங்கல் துண்டிக்கப்பட்டுள்ளதால் மனிதநேய உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில், பஸ் நிலைய வளாகத்தில் மனிதநேய உதவியாக வழங்கப்படும் உணவுப் பொருட்களைப் பெற ஏராளமானோர் வரிசையில் காத்து நின்றனர்.

ரஷ்யாவின் டொய்லாட்டி நகரிலுள்ள லாடா நிறுவனத்தின் வாகனத் தயாரிப்புத் தொழிற்சாலையில் பல்லாயிரம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

சோவியத் காலத்தில் இருந்ததைவிட இப்போது உற்பத்தி பாதியாகக் குறைந்துவிட்டபோதும் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைத்து வந்தது.

இந்நிலையில், மேலைநாடுகளின் பொருளாதாரத் தடை காரணமாக ரஷ்யாவில் இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தொழிலாளர்களும் லாடா நிறுவனமும் கடும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

தென் அமெரிக்கா நாடான ஈக்குவடோர் வாழைக்காய் ஏற்றுமதியில் உலகில் முதலிடத்திலுள்ளது. இங்கு விளைவிக்கப்படும் வாழைக்காய்கள் பெருமளவில் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. உக்ரைன் போரின் விளைவாக ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலை உள்ளதால் வாழைக்காய்கள் தேக்கமடைந்துள்ளன. இதனால் ஈக்குவடோர் வாழை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**உக்ரைனால் வெல்ல முடியும்**

''ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனால் நிச்சயம் வெல்ல முடியும்'' என அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் மதிப்பிட்டுள்ளது.

இரு நாடுகளுக்கிடையேயான போர் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் ஆபத்திருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கூறிவருவதற்கு மத்தியில், செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய பென்டகன் செய்தித்தொடர்பாளர் ஜோன் கிர்பி, உக்ரைனில் ஜனாதிபதி புட்டின் தன்னுடைய ஒரு செயற்றிட்டத்தில் கூட இதுவரை வெற்றியடையவில்லை என கூறினார்.

மேலும் உக்ரைனுக்கு புதிய ஆயுத அமைப்புகள், காமிக்கேஸி எனப்படும் ஸ்விட்ச்பிளேடு டிரோன்கள், மற்றும் டாங்குகளை தாக்கி அழிக்கும் ஜாவலின் ஏவுகணை அமைப்புகள் உள்ளிட்டவற்றை அனுப்பிவைப்பது தொடர்பாகவும் அப்போது அவர் விவாதித்தார்.

# பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவ தமிழக அரசு தயார்

**மத்திய அரசிடம் அனுமதி கோரிய முதலமைச்சர் ஸ்டாலின்**

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உதவ மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கரிடம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கரை நேற்று (07) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை குறித்து பேசினார். அப்போது, இலங்கையில் முன்னெப்போதும் இல்லாதளவிற்குத் தற்போது நிலவும் தீவிர பொருளாதார நெருக்கடியில் சிக்கி, வேதனையில் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக்கொண்டார்.

இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் வசிக்கும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், தலைநகர் கொழும்பிலும் வசிக்கும் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் நலன் கருதி, தமிழக அரசு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளதாகவும், மனிதாபிமான நோக்கில் அனுப்பப்படும் இத்தகைய பொருட்களை உணவின்றித் தவிக்கும் தமிழர்களுக்கு



கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகம் மூலம் விநியோகிக்க உரிய அனுமதியையும், ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

இதுதொடர்பாக இந்தியப் பிரதமரை கடந்த மார்ச் 31ஆம் திகதி சந்தித்து, தான் முன்வைத்த கோரிக்கைகளை நினைவுகூர்ந்த முதலமைச்சர், அந்தக் கோரிக்கைகளை எல்லாம் உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்றும் அப்போது கேட்டுக்கொண்டார்.

அதேபோன்று, இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவது குறித்தும், கைது செய்யப்படுவது குறித்தும் தனது ஆழ்ந்த கவலையை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் தெரிவித்துக்கொண்ட முதலமைச்சர், இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தமிழக முதலமைச்சர் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜபக்ஷ...

04ஆம் பக்கத் தொடர்ச்சி....

சிங்கள - பௌத்த பேரினவாத நாடான இலங்கை இராணுவமயமாக்கலில் இறங்கியது. இவர்கள் இருவரும் குடும்ப உறுப்பினர்கள் பலரை பல்வேறு பணியிடங்களில் அமர்த்தினார்கள். பெரியளவில் ஊழல் நடைபெற்றது. 'சண்டேலீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்ட பிறகு ஊடகவியலாளர்கள் உயிருக்கு அஞ்சத் துவங்கினார்கள்.

இந்த சமயத்தில்தான் ராஜபக்ஷ சீனாவுடனான உறவை ஆழமாக எடுத்துக் கொண்டார். பீஜிங் , சிறிமாவோ காலத்தில் இருந்தே ஒரு பெரிய உட்கட்டமைப்பு முயற்சிக்காக இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

2011ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகம் திறந்துவைக்கப்பட்டது. நாட்டின் பெரும்பான்மையான பகுதிகள் அதிவேக நெடுஞ்சாலைகளால் இணைக்கப்பட்டன. 2014ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தில் ஒரு நீர்மூழ்கிக் கப்பலை சீனா நிறுத்த அது டில்லிக்கு முதல் எச்சரிக்கை மணியாக ஒலித்தது.

தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான இந்தியாவின் வற்புறுத்தலுக்கு கொழும்பில் சிறிய வரவேற்பு கிடைத்தது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தி.மு.க. இருந்த காரணத்தால் ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா எடுத்தது. 2015ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்த போது இந்திய ரோ அமைப்பு மீது குற்றம் சுமத்தினார். ஆனால், பிரதமராகும் முயற்சியும் அப்போது தோல்வியை தழுவியது.

அரசியலில் மறுபிரவேசம் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மூலம் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் களம் காண துவங்கினார். மஹிந்த வருகைக்கு அஞ்சிய முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பதவிநீக்கம் செய்து மஹிந்தவை பிரதமராக நியமித்தார். ஆனாலும் அந்த ஏற்பாடு அதிக காலம் நீடிக்கவில்லை. மீண்டும் விக்ரமசிங்கவே ஆட்சிப்பொறுப்பை ஏற்கும்படி அமைந்தது. சில மாதங்கள் கழித்து விக்ரமசிங்க தன்னுடைய பதவியிலிருந்து விலகினார்

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றார். 2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்று வெற்றிபெற்ற மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் நெருக்கடியின் தீவிரத்தை கண்காணிக்க தவறிவிட்டது. ஒரு காலத்தில் மிகவும் பிரபலமடைந்த ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் தற்போது தங்கள் அரசியல் வாழ்வின் நிலை குறித்து யோசித்து வருகின்றனர்.

**நிருபமா சுப்ரமணியன்**

**நன்றி - இந்தியன் எக்ஸ்பிரஸ்**

# மும்பையின் வெற்றிக் கனவை ஒரே ஓவரில் தகர்த்த கம்மின்ஸ்

## ஐ.பி.எல். வரலாற்றில் இணை சாதனை



இந்தியன் ப்ரீமியர் லீக் வரலாற்றில் குறைந்த பந்தில் அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனையை கே.எல்.ராகுலுடன் இணைந்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பெட் கம்மின்ஸ் படைத்தார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 14ஆவது லீக் போட்டியில் நேற்று முன்தினம் மும்பை இந்தியன்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் புனேயில் மோதின. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி பந்துவீச்சை தெரிவுசெய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய மும்பை அணி 4 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களை குவித்தது.

இதனையடுத்து 162 ஓட்டங்களை வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய கொல்கத்தா அணியும் தொடக்கத்தில் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. ஆனால், ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய வெங்கடேஷ் ஐயர் 41 பந்துகளில் 50 ஓட்டங்கள் விளாசி கடைசிவரை களத்தில் இருந்தார்.

15ஆவது ஓவர் வரை வெற்றிவாய்ப்பு நம் பக்கம் இருக்கிறது என நினைத்த மும்பையின் கனவை களத்தில் இறங்கிய அடுத்த நிமிடத்திலிருந்து சுக்குநூறாக உடைத்தார் கம்மின்ஸ். பந்துகளை விளாசி வாணவேடிக்கைகளாக பறக்க விட்ட கம்மின்ஸ், கொல்கத்தாவை ஈஸியாக வெற்றிக்கு அழைத்துச் சென்றார். 16 ஓவரில் மட்டும் 35 ஓட்டங்களை வாரி வழங்கினார் மும்பை வீரர் டேனியல் சாம்ஸ்.

அதேநேரத்தில் ஐ.பி.எல். வரலாற்றில் குறைந்த பந்தில் அரைச்சதம் அடித்த கே.எல்.ராகுலின் சாதனையை கம்மின்ஸ் சமன்செய்தார். இந்தப் போட்டியில் 14 பந்துகளில் அவர் அரைச்சதம் அடித்தார். மொத்தம் 15 பந்துகளை எதிர்கொண்ட கம்மின்ஸ் 4 பவுண்டரிகளையும் 6 மெகா சிக்ஸர்களையும் விளாசி மொத்தம் 56 ஓட்டங்களை பெற்றார்.

MI vs KKR
போட்டியை காண

# மார்ச் மாதத்தின் சிறந்த வீர, வீராங்கனைக்கான பரிந்துரை பட்டியல் வெளியீடு




சர்வதேச கிரிக்கெட் பேரவையானது கடந்த 2021 ஜனவரி மாதத்திலிருந்து மாதந்தோறும் சிறந்த கிரிக்கெட் வீரர்களை தெரிவுசெய்து கௌரவித்து வருகிறது. இந்நிலையில், மார்ச் மாதத்திற்கான சிறந்த வீரர் யார் என்பதை அடையாளம் காண்பதற்கான வீரர்களின் பெயரை ஐ.சி.சி. தற்போது பரிந்துரைத்துள்ளது.

இதில் ஆடவர் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம், மேற்கிந்திய தீவுகள் அணியின் கிரெய்க் பிராத்வெயிட், அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைவர் பெட் கம்மின்ஸ் ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அதேபோல், மகளிர் சிறந்த வீராங்கனைக்கான பரிந்துரை பட்டியலில் சோபி எக்ளேஸ்டோன், லாரா வால்வோர்டட் மற்றும் ரேச்சல் ஹெய்ன்ஸ் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இவர்களில் மார்ச் மாதத்திற்கான சிறந்த வீர, வீராங்கனைக்கான விருதை வெல்லப்போவது யார் என ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

# ஆட்டம் மாறிய விதத்தை ஜீரணிக்க முடியவில்லை

## தோல்வியின் பின்னர் ரோஹிட் கருத்து



கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் பெட் கம்மின்ஸின் அதிரடி ஆட்டத்தின் மூலம் கொல்கத்தா அணி இலகு வெற்றியொன்றை பதிவுசெய்தது. மும்பை இந்தியன்ஸ் அணியின் பக்கம் இருந்த வெற்றிவாய்ப்பை தனியாளாக பெட் கம்மின்ஸ் மாற்றியமைத்தார்.

குறித்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி தோல்வியை தழுவியதன் பின்னர் அந்த அணியின் தலைவர் ரோஹிட் சர்மா இவ்வாறு தெரிவித்தார்.

பெட் கம்மின்ஸ் களமிறங்கி இப்படி ஓர் ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என நான் எதிர்பார்க்கவேயில்லை. இதுபோல் விளையாடியதற்குப் பாராட்டுகள். துடுப்பாட்டத்தில் நாங்கள் சரியாகத் தொடங்கவில்லை. கடைசி 4 ஓவர்களில் நன்கு விளையாடி 161 ஓட்டங்கள் எடுத்தது நல்ல முயற்சி.

15ஆவது ஓவர் வரைக்கும் ஆட்டம் எங்கள் பக்கம் இருந்தது. ஆனால், கம்மின்ஸின் ஆட்டத்தினால் நாங்கள் தோற்றுவிட்டோம். கே.கே.ஆர். அணியை வீழ்த்திவிடலாம் என நினைத்தோம். கடைசி சில ஓவர்களில் இந்த ஆட்டம் மாறிய விதத்தை ஜீரணிப்பது கடினம். நாங்கள் இன்னும் கடினமாக உழைக்கவேண்டும் - என தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



# ஏலத்திற்கு செல்லும் மரடோனாவின் ஜேர்சி

கடவுளின் கை உதவியால் கோல் அடித்தபோது மாரடோனா அணிந்த ஜேர்சி ஏலம் விடப்படவுள்ளது.

உதைபந்து உலகின் ஜாம்பவான் ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த மறைந்த மாரடோனா 4 முறை உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்றார். 1986இல் ஆர்ஜென்டினா அணிக்கு உலகக்கிண்ணத்தை வென்றுகொடுத்தார். இத்தொடரின் காலிறுதியில் இங்கிலாந்துக்கு எதிராக, தனது இடது கையை பயன்படுத்தி, கோல் அடித்து சர்ச்சை கிளப்பினார். இதுகுறித்து அவர் கூறுகையில், அது கடவுளின் கை - என்றார்.

அடுத்து, 55ஆவது நிமிடத்தில் 60 மீற்றர் தூரத்திலிருந்து ஐந்து இங்கிலாந்து வீரர்களை கடந்து சென்று சுப்பர் கோல் அடித்தார். இது நூற்றாண்டின் சிறந்த கோலாக போற்றப்பட்டது. போட்டி முடிந்த பின் தனது ஜேர்சியை கழற்றி இங்கிலாந்து முன்னாள் வீரர் ஸ்ரீவ் ஹாட்ஜிடம் கொடுத்தார். இது கடந்த 20 ஆண்டுகளாக இங்கிலாந்தின் மென்செஸ்டரிலுள்ள தேசிய உதைபந்து மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது. அப்போது மாரடோனா அணிந்திருந்த 10ஆம் எண் கொண்ட ஜேர்சி தற்போது ஏலம் விடப்படவுள்ளது.

இணையதள வழியில் நடக்கவுள்ள இந்த ஏலம், எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் ரூ. 40 கோடிமுதல் ரூ. 60 கோடிவரை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பழங்கால பொருட்கள் சேகரிப்பு நிறுவனத்தின் தலைவர் பிராம் வாட்ச்சர் கூறுகையில், விளையாட்டு உலகின் மிக முக்கியமான நினைவுப்பொருள் மாரடோனா ஜேர்சி. அவர் கோல் அடித்த நிமிடம், விளையாட்டு வரலாற்றில் சிறந்த தருணம் - என்றார்.

# நடிகையின் வலையில் விழுந்த வீரர்



ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் இளம் வீரர் வெங்கடேஷ் ஐயர் தெலுங்கு நடிகையான பிரியங்கா ஜவால்கர் என்பவரை பின்தொடர்வதால் ரசிகர்கள் எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

கடந்த வருடம் முதலில் இந்தியாவில் நடந்த ஐ.பி.எல். தொடரின் முதல் பாகத்தில் அடுத்தடுத்த தோல்விகளால் தடுமாறிய அந்த அணி பிளேஆப் சுற்றுக்குக் கூட தகுதிபெறாது என அனைவரும் நினைத்தனர். ஆனால், அதன்பின் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்த இரண்டாவது பாகத்தில் அதிரடியாக செயற்பட்ட அந்த அணி, அடுத்தடுத்த வெற்றிகளை பதிவுசெய்து பிளேஆப் சுற்றுக்கு தகுதிபெற்று இறுதிப் போட்டிக்கும் சென்று அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. அதற்கு முக்கிய காரணம், இளம் வீரர் வெங்கடேஷ் ஐயர் என்றே கூறலாம்.

இந்நிலையில், தற்போது ஐ.பி.எல். தொடரில் ஷ்ரேயஸ் ஐயர் தலைமையில் விளையாடிவரும் அவர், பிரியங்கா ஜவால்கர் எனும் பிரபல தெலுங்கு நடிகையுடன் கொஞ்சி குலாவி வருவது ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டுமுதல் தெலுங்கு திரையுலகில் நடித்துவரும் பிரியங்கா ஜவால்கர் கலா வரம் ஆயே, டேக்ஸிவாலா, திம்மருசு போன்ற படங்களில் நடித்து ரசிகர்களிடையே பிரபலமானவர்.

தற்போது 29 வயது நிரம்பியுள்ள அவர், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஓர் அழகான புகைப்படத்தை பதிவிட்டிருந்தார். அதைப் பார்த்த வெங்கடேஷ் ஐயர் கியூட் என ரொமான்ஸாக கமெண்ட் செய்ய அதற்கு அந்த நடிகை யார்? நீங்களா என பதிலளித்துள்ளார். இதை பார்த்த நிறைய ரசிகர்கள் இந்த இருவருக்கும் காதலா என்பதுபோல் வழக்கமான கிசுகிசுக்களை பேசி வருகிறார்கள்.

அதேசமயம், இதுபோன்ற நடிகைகளிடம் பேசுவதை விட்டுவிட்டு ஐ.பி.எல். தொடரில் கவனம் செலுத்துங்க என்றும் வெங்கடேஷ் ஐயருக்கு நிறைய ரசிகர்கள் அறிவுரை வழங்குகின்றனர். ஏனெனில், கடந்த வருடம் சக்கை போடு போட்டு இந்திய அணியில் விளையாடும் அளவுக்கு உயர்ந்த அவர், இந்த வருடம் இதுவரை பங்கேற்ற மூன்று போட்டிகளில் வெறும் 29 ஓட்டங்கள் 9.67 என்ற படுமோசமான சராசரியில் எடுத்து தடுமாறி வருகிறார்.

# யங் கொமைனி கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் றபா விளையாட்டுக் கழகம் சம்பியன்

(பொத்துவில் நிருபர்)



பொத்துவில் யங் கொமைனி விளையாட்டுக் கழகத்தின் 43ஆவது வருட ஞாபகார்த்தக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் றபா விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தினை சுவீகரித்துக்கொண்டது.

யங் கொமைனி விளையாட்டுக் கழகத்தின் 43ஆவது வருட நிறைவையொட்டி, அக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் பசறிச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அணிக்கு 11 பேர் 8 ஓவர்கள்கொண்ட இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் பொத்துவில் சதாம் மற்றும் பொத்துவில் றபா ஆகிய விளையாட்டுக் கழக அணிகள் மோதின.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சதாம் விளையாட்டுக் கழக அணியினர் முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தனர். இதற்கிணங்க, முதலில் துடுப்பெடுத்தாடிய றபா விளையாட்டுக் கழக அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

66 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சதாம் விளையாட்டுக் கழக அணியினர் 7.2 ஓவர் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 42 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியினை தழுவிக்கொண்டனர். இதற்கிணங்க, இறுதிப் போட்டியில் 23 ஓட்டங்களினால் றபா விளையாட்டுக் கழக அணியினர் வெற்றிபெற்றனர்.

றபா விளையாட்டுக் கழக வீரர் அர்ஷாத் இறுதிப்போட்டி மற்றும் இச்சுற்றுப் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும், சிறந்த வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டார். இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் யங் கொமைனி விளையாட்டுக் கழகத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட கழகத்தின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு இறுதிப்போட்டியில் முதலாமிடம் மற்றும் இரண்டாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட அணிகளுக்கு கிண்ணங்களையும், பணப்பரிசில்களையும் வழங்கினர்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7